இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 167 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 14 – ஞாயிற்றுக்கிழமை 28 ஜனவரி 2024 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 167 : Thiruvalluvar Year - 2055 - Thai 14 - Sunday 28 January 2024 - Chennai 10 Pages ₹ 5.00

## ஐரோப்பிய நாடுகளின் கவனத்தை ஈர்த்து பெருமளவு முதலீடுகளை தமிழ்நாட்டுக்கு கொண்டுவரவே இந்தப் பயணம்!

# ஸ்பெயினில் முதலீட்டாளர்கள் மாநாடு!

## 8 நாள்கள் வெளிநாட்டுப் பயணம் புறப்படும்முன் - விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 28 -**

**ஸ்பெயின் நாட்டில் 8 நாள்கள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டு, சென்னையிலிருந்து நேற்று மாலை புறப்படும் முன், விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டிய ளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “ஐரோப்பிய நாடுகளின் கவனத்தை ஈர்த்து பெருமளவு முத லீடுகளை தமிழ்நாட்டுக்குக் கொண் டுவரவே இந்தப் பயணம்!” என்று குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் தமது பேட்டியில், “ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளைப் போன்றே, ஸ்பெயின் நாட்டிலும், முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த இருக்கிறேன். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னணி முதலீட் டாளர்கள், வணிக அமைப்புகள், தொழில் முனைவோர் இந்த மாநாட் டில் கலந்து கொள்ள இருக்கிறார் கள்” என்று அறிவித்தார்.**

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். நேற்று (27.1.2024) மாலை, சென்னை விமான நிலை யத்தில், தமிழ்நாட்டிற்குப் புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயண மாக ஸ்பெயின் நாட்டிற்குப் புறப் படுவதற்கு முன்பாக செய்தியா ளர்களைச் சந்தித்துப் பேசிய தாவது :-*

முதலில் அனைவருக்கும் நன்றி.

அனைவரின் ஆதரவோடு, நமது திராவிட மாடல் அரசின் 1 டிரில்லியன் பொருளாதார இலக்கை எட்டிவிடும் முயற்சி களில், 2024ஆம் ஆண்டு தொடக்கமே உலக முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றியாக அமைந்தது.

**பிப்.7 - சென்னை திரும்பிடல்!**

அதனைத் தொடர்ந்து இன்று பயண நாட்கள் தவிர்த்து 8 நாட்கள் பயணமாக ஸ்பெயின் செல்கிறேன். பிப்ரவரி 7ஆம் தேதி காலை சென்னை திரும்புகிறேன்.

**கடந்த இரண்டு பயணங்கள் மூலம் ரூ.7,442 கோடி முதலீடு ஈர்ப்பு!**

என்னுடைய கடந்தகால வெளி நாட்டுப் பயணங்களைப் பொறுத்த வரை, கடந்த 2022ஆம் ஆண்டு, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற் காக, ஐக்கிய அரபு நாடுகள் சென்றி ருந்தேன். அந்தப் பயணத்தில், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்கும் 6 ஆயி ரத்து 100 கோடி ரூபாய் முதலீடு களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங் கள் கையெழுத்தானது.

அதேபோல, 2023ஆம் ஆண்டு மே மாதம் சிங்கப்பூர் மற்றும் ஜப் பான் நாடுகளுக்கு சென்றதில், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்கும் ஆயி ரத்து 342 கோடி ரூபாய் முதலீடு களுக்கான புரிந்து ணர்வு ஒப்பந்தங் கள் கையெழுத்தானது.

இந்த இரண்டு பயணங்கள் மூலமாக, 17 ஆயிரத்துக்கும் மேற் பட்ட வேலைவாய்ப்புகளை உரு வாக்கும் 7 ஆயிரத்து 442 கோடி ரூபாய்க்கான முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற் கொள்ளப்பட்டன.

**அரசின் வேகமான செயல் வடிவம்! பெரும் நிறுவனங்கள் பேரார்வம்!**

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்க ளுக்கு வேகமாக செயல்வடிவம் கொடுத்ததால் பல நிறுவனங்கள், தங்களின் தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் நிறுவத் தொடங்கியி ருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஓம்ரான் மற்றும் மிட்சுபிஷி போன்ற நிறு வனங்கள், தங்களின் தொழிற் சாலைகளை நிறுவத் தொடங்கிவிட் டார்கள்.

**கோவையில் - ‘லூலூ குழுமம்’ திட்டத்தைத் தொடங்கியது!**

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட இரண்டே மாதங்க ளில், ‘ஓம்ரான்’ நிறுவனத்தின் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதேபோன்று, சிங்கப்பூர் நாட் டைச் சேர்ந்த கேப்பிடாலேண்டு நிறு வனத்தின் ஐ.டி. பூங்காவை சமீபத் தில் தொடங்கி வைத்தேன்.

**இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ள தமிழ்நாடுதான் உகந்த மாநிலம்!**

ஐக்கிய அரபு நாடுகளில் மேற் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்க ளில், லூலூ பன்னாட்டுக் குழுமம், கோயம்புத்தூரில் தன்னுடைய திட் டத்தைத் துவங்கி யிருக்கிறது.

“ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடு களைப் போன்றே, ஸ்பெயின் நாட்டி லும், முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த இருக்கிறேன். ஸ்பெயின் நாட் டைச் சேர்ந்த முன்னணி முதலீட்டா ளர்கள், வணிக அமைப்புகள், தொழில் முனைவோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கிறார்கள்”.

இந்த மாநாட்டில், தமிழ்நாட்டில் நிலவும் சாதகமான முதலீட்டுச் சூழல் பற்றியும், தமிழ்நாட்டின் கட்டமைப்பு வசதிகள், மனிதவள ஆற்றல் போன்ற வற்றின் சிறப்பம்சங்களை யும் எடுத்துக்கூறி, இந்தியாவில் முத லீடு களை மேற்கொள்ள தமிழ்நாடு தான் உகந்த மாநிலம் என்று, அந்த நாட்டு முதலீட்டா ளர்களுக்கு எடுத்து ரைக்க இருக்கிறேன்.

**‘இன்வெஸ்ட் ஸ்பெயின்’ அமைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தை!**

இந்தப் பயணத்தின்போது, ரோகா (ROCA) மற்றும் கெஸ்டாம்ப், உட்பட சில பெரும் தொழில் நிறுவ னங்களுடனும், ‘Invest Spain’ எனும் முதலீட்டு அமைப்புடனும் நேரடிப் பேச்சு வார்த்தைகள் மேற் கொள்ளப்பட இருக்கிறது.

இந்தப் பயணத்தின் மூலமாக, ஐரோப்பிய நாடுகளின் கவனத்தை யும் ஈர்த்து, அந்த நாடுகளில் இருந் தும் முதலீடுகளை பெருமளவில் ஈர்க்க முடியும் என்று நம்புகிறேன்.

எனவே, உங்கள் அனைவரின் வாழ்த்துக்களோடு இந்தப் பயணம் வெற்றி பெறும் என்று நம்புகிறேன்.

**கேள்வி:** – *உங்கள் வெளிநாட் டுப் பயணம் வெற்றி பெற வாழ்த் துகள். பெரிய நிறுவனம் ஏதாவது வர வாய்ப்பு இருக்கிறதா? எவ்வ ளவு முதலீடுகள் எதிர்பார்க்கப் படுகிறது?*

**முதலமைச்சர்**:– நான் பயணம் முடித்துவிட்டு வந்த பிறகு விளக்கமா கச் சொல்கிறேன்.

*இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சென்னை விமான நிலையப் பேட்டியின் போது குறிப்பிட்டார்.*




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று(27.1.2024) சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்குப் புறப்படுவதற்கு முன்பாக செய்தியாளர்களைச் சந்தித்தார்.



தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்குப் புறப்பட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (27.1.2024) சென்னை விமான நிலையத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.




இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாட்டின் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து, இளைஞரணியின் அடுத்தக்கட்டப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக, மாவட்ட மாநகர, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். மேலும் இளைஞரணி மாநாட்டுக்கான அறிவிப்பு வெளியான நாள் முதல், மாநாட்டு நாள் வரை நம் மாநில உரிமை மீட்பு மாநாட்டின் வெற்றிக்காக அயராது உழைத்த இளைஞரணி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும் அன்பையும், நன்றியையும் தெரிவித்து, நினைவுப் பரிசை வழங்கினார்.



கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 75 ஆவது இந்தியக் குடியரசு தினத்தை முன்னிட்டு 'குறிஞ்சி' முகாம் அலுவலகத்தில் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்தார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.01.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TN Champions Foundation) நிதியிலிருந்து செஸ் கிராண்ட் மாஸ்டரும், அர்ஜுனா விருது பெற்றவருமான செல்வி.ஆர்.வைஷாலி அவர்களுக்கு சர்வதேச போட்டிப் பயிற்சிக்கான செலவினத் தொகை ரூ.15,00,000/க்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.



அரசுப்பள்ளிக்கு தன்னுடைய நிலத்தை தானமாக வழங்கிய மதுரை ஆயி அம்மாள் அவர்கள், முதலமைச்சரின் சிறப்பு விருதினை குடியரசு தினத்தில் பெற்றதையொட்டி அவருக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்தார். உடன் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளார்.

### நாடாளுமன்றத் தேர்தலில்

# மக்களிடம் அரசின் திட்டங்களைக் கூறி தி.மு.க.வை வெற்றி பெறச் செய்வோம்!

## திருச்சி வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

*திருச்சி, ஜன. 28 -*

திருச்சி தென்னூரில் உள்ள மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி மணிமண்டபத்திலும், விராலிமலை சண்முகம் மணிமண்டபத்திலும், பல்வேறு அரசியல் கட்சியினர் மொழிப்போர்த் தியாகிகள் நாளன்று மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள். பின்னர் தமிழ் மொழியை பாதுகாக்க அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் இந்தி மொழி திணிப்பை எதிர்த்த மொழிப் போராட்டத்தில் அன்னை தமிழுக்காக கடந்த 25.01.1964 ஆம் நாள், கீழப்பழுவூர் சின்னசாமியும், கடந்த 25.02.1965 ஆம் நாள் விராலிமலை சண்முகமும் உயிர்நீத்தார்கள். அவர்கள் இருவருக்கும் திருச்சி தென்னூர் உய்யக்கொண்டான் ஆற்றின் கரையில் தனித்தனியாக மணிமண்டபங்கள் புதிதாக கட்டப்பட்டுள்ளது.

மொழிப்போர்த் தியாகிகள் நினைவு மண்டபத்திற்கு பேரணியாக வந்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்டோர், கழகத் தொண்டர்கள், நிர்வாகிகள், தியாகிகள் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர் பேரணியின் முடிவில் திருச்சி தென்னூர் உழவர் சந்தை அருகே தி.மு.க. சார்பில் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அந்த கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசுகையில் ...



விராலிமலை சண்முகம், கீழப்பழுவூர் சின்னசாமி உள்ளிட்ட மொழிப்போர்த் தியாகிகள் செய்த தியாகத்தால் இன்று தி.மு.க. ஆட்சியில் இருக்கிறது. இன்றும் இந்தியை கற்றுக் கொள்ளுங்கள். இந்தி கற்றால் தான் வேலை வாய்ப்பு கிடைக்கும் என பலர் பேசி வருகிறார்கள். ஆனால் உண்மையான நிலை என்பது இந்தி பேசக்கூடிய வடமாநிலங்களைச் சேர்ந்த ஒரு கோடிக்கும் மேற்பட்டோருக்கு தெரியும். அவர்கள் தமிழ்நாட்டிற்கு தான் வேலை தேடி வந்திருக்கிறார்கள். அவர்களுடைய மாநிலங்களில் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை.

நாம் இருமொழிக் கொள்கையை பின்பற்றி ஆங்கிலம் கற்றுக் கொண்டு நம்முடைய வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டு வருகிறோம்.

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பின்பு தி.மு.க. தொண்டர்களிடையே சுறுசுறுப்பு சற்று குறைவாக இருக்கிறது. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருச்சி மக்களவைத் தொகுதியை தி.மு.க.விற்கு ஒதுக்க வேண்டும் என தி.மு.க. தொண்டர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். இது குறித்து நான் தலைவரிடம் பேசுவேன்.

திருச்சி தொகுதியை தி.மு.க.வுக்கு ஒதுக்கிறார்களோ? கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்குகிறார்களோ? யாருக்கு ஒதுக்கினாலும் நாம் அவர்களை வெற்றி பெற செய்ய பாடுபட வேண்டும்.

திருச்சி தொகுதியில் கடந்த 45 ஆண்டுகாலம் தி.மு.க. போட்டியிடவில்லை. அதனால் இத்தொகுதியை இந்த முறை தி.மு.க.விற்கு ஒதுக்கச்சொல்லி தலைவரிடம் கேட்போம். திருச்சி மக்களவை தொகுதியை தி.மு.க.விற்கு ஒதுக்கினால் மகிழ்ச்சி, இல்லை என்றால் தலைவர் என்ன கூறுகிறாரோ அதனை செயல்படுத்துவோம்.

உங்களால் வெற்றி பெற முடியுமா என தி.மு.க.வை பார்த்து சிலர் கேட்கிறார்கள். நிச்சயமாக தி.மு.க. தான் வெற்றி பெறும்.

அனைத்து யுக்திகளையும் பயன்படுத்தி தி.மு.க.வை வெற்றி பெறச் செய்வோம். மக்கள் தி.மு.க.விற்கு தான் ஆதரவு அளிப்பார்கள்.

மகளிர்க்காக பல்வேறு திட்டங்களை தி.மு.க. அரசு செயல்படுத்தி வருகிறது. பெண்கள் யாருக்கு ஆதரவாக இருக்கிறார்களோ அந்த கட்சி தான் வெற்றி பெறும் அந்த வகையில் பெண்கள் தி.மு.க.விற்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

வரும் தேர்தலில் தி.மு.க.வை வெற்றி பெற செய்வோம் என மொழிப்போர்த் தியாகிகள் நினைவு நாளில் சூளுரைப்போம் என்றார்.

கூட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனியாண்டி, ஸ்டாலின் குமார், கதிரவன், மாநகராட்சி மேயர் அன்பழகன், கிழக்கு மாநகரச் செயலாளர் மதிவாணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தாயார் அஞ்சுகத்தம்மையார் அவர்களின் 60வது நினைவு தினத்தில் திருவாரூர் காட்டூரில் உள்ள அவரது நினைவிடத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., கலைஞர் குடும்பத்தைச் சேர்ந்த சோமாஸ்கந்தன், தஞ்சை இளங்கோவன், ஒன்றியச் செயலாளர் சேகர் கலியபெருமாள், நகரச்செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், நகர்மன்ற துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர், மாணவரணி அமுதா.ஆர் சந்திரசேகர், ஊராட்சி மன்றத் தலைவர் விமலா பிரபாகரன் உள்ளிட்டோர் உடன் மலரஞ்சலி செலுத்தினர்.


கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
(கலை பண்பாட்டு இயக்ககம்)
கலைஞர் நூற்றாண்டு மற்றும்
பொங்கல் விழா - இசைச் சங்கமம்
புதுப்பிக்கப்பட்ட அலுவலக கட்டட திறப்பு விழா
நாள் : 28.01.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி
இடம்: இயல் இசை நாடக மன்ற வளாகம், "பொன்னி"
எண். 31, P.S. குமாரசாமி ராஜா சாலை, சென்னை - 28
வரவேற்புரை : திருமதி. விஜயா தாயன்பன் உறுப்பினர்-செயலர்
தலைமை : திரு. வாகை சந்திரசேகர் தலைவர்
கட்டடம் திறப்பு மற்றும்
வாழ்த்துரை : மாண்புமிகு மு.பெ.சாமிநாதன் அவர்கள்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
மருத்துவர் க.மணிவாசன் இ.ஆ.ப. அவர்கள்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை
முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
மதிப்பிற்குரிய எம்.மகேஷ்குமார் அவர்கள்
துணை மேயர், சென்னை பெருநகர மாநகராட்சி
திரு. மயிலை த.வேலு அவர்கள்
மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர்

தமிழக கிராமியக் கலைகள் மற்றும்
"தெய்யம்" கேரள கிராமிய நடனம்
அனைவரும் வருக!
அன்புடன் அழைக்கும்: G.மோகன்
பகுதி பிரதிநிதி, 113வது வட்டம்






நாடாளுமன்றத் தேர்தல் குறித்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற சேலம் மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். உடன் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர்கள் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டக் கழக செயலாளர்கள் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.சிவலிங்கம், டி.எம்.செல்வகணபதி மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை!

## இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன.28-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று ஒலிம்பிக் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் திறன் வாய்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு தேவையான அடிப்படை உதவிகளை வழங்குவதற்காக "தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை (ELITE)" திட்டத்தின் கீழ் ஆர்.பிரக்ஞானந்தா மற்றும் டி.குகேஷ் ஆகிய செஸ் விளையாட்டு வீரர்களுக்கு சர்வதேசப் போட்டி பயிற்சிக்கான செலவினத் தொகை தலா ரூ.15,00,000/க்கான காசோலையினை வழங்கினார்.

மேலும், தமிழகத்தைச் சேர்ந்த செஸ் கிராண்ட் மாஸ்டரும், அர்ஜுனா விருது பெற்றவருமான செல்வி.ஆர். வைஷாலிக்கு சர்வதேச போட்டிப் பயிற்சிக்கான செலவினத் தொகை ரூ.15,00,000/க்கான காசோலை, காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். திருலோகச்சந்திரன், வருகின்ற 03.04.2024 அன்று உலகிலேயே உயரமான சிகரமான எவெரெஸ்ட் சிகரத்தை ஏறி சாதனை படைத்திட தேவையான நிதி உதவித் தொகை ரூ.5,00,000/க்கான காசோலை மற்றும் 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 7-ஆம் தேதி முதல் பிப்ரவரி 11-ஆம் தேதி வரை டெல்லியில் நடைபெற உள்ள சர்வதேச அளவிலான கிக் பாக்சிங் போட்டியில் கலந்து கொள்ள செல்வி.தி.ஆ.பிரியதர்ஷினிக்கு நுழைவுக் கட்டணம், இரயில் கட்டணம், மற்றும் சீருடைச் செலவினம் ஆகியவற்றுக்கான தொகை ரூ.55,000/க்கான காசோலையினையும், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறன் தடகள வீரரான ரா.ராஜேசுக்கு ரூ.12,00,000/ செலவினத்தில் செயற்கைக்கால்கள் அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TN Champions Foundation) நிதியில் இருந்து வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில்

# போட்டித் தேர்வர்களுக்கு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்!

## தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்படும்!

சென்னை, ஜன.28-

போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் மூலம் படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறும் வகையில் (TNPSC, SSC, IBPS, RRB etc) போட்டித் தேர்வுக்கான பயிற்சி வழங்கப்படும் என பயிற்சித்துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

அது வருமாறு:-

TNPSC, SSC, IBPS, RRB ஆகிய முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ளும் தமிழ் நாட்டைச் சேர்ந்த தேர்வர்களுக்கு தமிழக அரசின் சார்பில் இயங்கும் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களால் கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள், சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள சர் தியாகராயா கல்லூரியில் 500 இடங்களுக்கும் , சென்னை சேப்பாக்கம் மாநிலக் கல்லூரி வளாகத்தில் 300 இடங்களுக்கும் பயிற்சி வழங்கப்படுகிறது .

மேற்படி போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் தேர்வர்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்கு இணைய வழியாக விண்ணப்பங்கள் பெற்று, சேர்க்கை நடைபெற உள்ளது. பயிற்சி வகுப்புகள் பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை ஆறு மாத காலம் வாராந்திர வேலை நாட்களில் நடைபெற உள்ளது. பயிற்சி வகுப்புகளில் சேர விரும்பும் தேர்வர்கள் குறைந்த பட்சம் 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பதோடு 01.01.2024 அன்று 18 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும். மேற்படி, போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களில் உணவும் தங்கும் வசதிகளும் இல்லை.

பயிற்சியில் சேர விரும்பும் தேர்வர்கள் www.cecc.in வாயிலாக 29.01.2024 முதல் 12.02.2024 வரை விண்ணப்பிக்கலாம். கூடுதல் விவரங்களை மேற்குறிப்பிட்ட இணையதள முகவரியில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 044-25954905 மற்றும் 044-28510537 ஆகிய தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தமிழக அரசால் நடைமுறைபடுத்தப்பட்டுள்ள இனவாரியான இடங்களுக்கு ஏற்ப தேர்வர்கள் தெரிவு செய்யப்பட்டு , தேர்வர்களின் விவரங்கள் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் வெளியிடப்படும், மார்ச் மாத முதல் வாரத்தில் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பயிற்சித்துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

---

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# பிப்.16-ஆம் தேதி தொழிற் சங்கங்கள் வேலைநிறுத்தம்!

சென்னை, ஜன. 28-

தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து மத்திய தொழிற் சங்கங்களின் கூட்டம் சென்னையில் நடந்தது. இதில், தொ.மு.ச., ஏ.ஐ.டி யு.சி., சி.ஐ.டி.யு., எச்.எம்.எஸ்., ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.யூ.டி.யூ., ஏ.ஐ.சி.சி.டி.யு., டபுள்யு.பி.டி யு.சி., எம்.எல்.எப்., எல்.எல். எப்., எஸ்.டி.யு.சி. ஆகிய சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஒன்றிய அரசின் மக்கள் விரோத ஜனநாயக விரோத, விவசாயிகள் விரோத தொழிலாளர் விரோத கொள்கைகளுக்கு எதிராக பிப்.16ம் தேதி வேலை நிறுத்தம், கிராமங்களில் முழு அடைப்பு, மறியல் உள்ளிட்ட வடிவங்களில் போராட்டம் நடத்த வேண்டும் என்று மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாயிகள் ஐக்கிய முன்னணியின் கூட்டு கூட்டம் முடிவு செய்துள்ளது. தமிழ் நாட்டில் பிப்.1க்கு முன் துறை வாரியாகவும் தொழிற் சாலை அளவிலும் வேலைநிறுத்த முன்னறிவிப்பு நோட்டீஸ் தர வேண்டும். பிப்.16ம் தேதி வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற ஏற்பாடுகளையும் திட்டமிட்டு செய்ய வேண்டும். விவசாயிகள் சங்கங்களின் கிராமப்புற போராட்டம் வெற்றிபெற தொழிற்சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கோரிக்கைகளை விளக்கி விரிவான பரப்புரை இயக்கம் மேற்கொள்ள வேண்டும். தெருமுனை கூட்டங் கள், ஆலை வாயில் கூட்டங்கள், தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதிகளில் வீடு வீடாகச் சென்று துண்டறிக்கை விநியோகித்தல் உள்ளிட்ட வடிவங்களில் இந்த இயக்கத்தை நடத்த வேண்டும். இளைஞர், மாணவர், பெண் கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய துறையினர், சிறு குறு தொழில் நிறுவனங்கள், வர்த்தகர்கள் உள்ளிட்டவர்கள், கோரிக்கையை ஆதரித்து போராட உடன் வரும் மக்கள் அமைப்புகளிடமும் ஆதரவு கோரி, மறியல் போராட்டத்தில் பங்கேற்க செய்ய வேண்டும் என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரியில் மொழிப்போர் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் மற்றும் மாணவரணி அமைப்பாளர் வெற்றி (எ)ராஜேஷ், த.தமிழழகன், எஸ்.சேதுராமன், உ.விக்னேஷ் உதயன் தலைமையில் நடைபெற்றது. மாநில இலக்கிய அணி புரவலர் தஞ்சை கூத்தரசன், மாநில இலக்கிய அணி பொருளாளர் முனைவர் நா.சந்திரபாபு, க.எழிலன் பங்கேற்று சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் மு.பகலவன், மு.கதிரவன், டாக்டர்.பரிமளம் விஸ்வநாதன் கே.சுப்பிரமணி ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் பா.சுகுமாறன், ஜி.ரவிக்குமார், எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், நா.செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன், அத்திப்பட்டு ஜி.ரவி, ஆரணி பி.முத்து, க.சு.தமிழ்உதயன் எம்.முரளிதரன், செ.யுவராஜ், இரா.கதிரவன், விவசாய அணி ஏ.கே.சம்பத்குமார், சிறுபான்மை நல பிரிவு அணி பழவைஅ.முகமதுஅலவி, தொழிலாளர் அணி மு.தினகரன், மகளிர் அணி தேசராணி தேசப்பன், மருத்துவர் அணி டாக்டர்.வில்சன் நிலவழகன், மீஞ்சூர் பேரூராட்சிதலைவர் ருக்குமணி மோகன்ராஜ், டாக்டர்.மா.தீபன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

---

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்களால் தொடங்கப்பட்ட "உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்புடன் "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டு" புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து

# புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல் (நான்காவது கட்டம்)

## தலைமைக் கழக அறிவிப்பு!

இந்திய வரலாற்றில் ஜனநாயக முறைப்படி உறுப்பினர் சேர்த்தலும் – புதுப்பித்தலுமான பணிகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வார்டு கிளைகள், ஊராட்சி, பேரூர், ஒன்றிய, நகர, பகுதி, நகரிய, மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநில அமைப்புகள், தலைமைக் கழகம் ஆகியவற்றுக்கு தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அமைப்புக்களை செயற்படுத்தும் கட்சி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடறியும். ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 140 வார்டு கழகங்களையும், 1 கோடியே 10 இலட்சத்திற்கு மேல் உறுப்பினர்களையும் கொண்ட தி.மு.கழகம்.

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டு காலம் கட்டி காத்த நம் கழகத்தை மேலும் வலிமைப்படுத்த, மேலும் ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்க "உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்பு கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட உள்ளது. ஏற்கனவே, ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்ட பேரியக்கத்தில், புதிதாக மேலும் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்கும் பெருமுயற்சியை ஏப்ரல் 3ஆம் தேதியன்று தொடங்கி, ஜூன் 3, 2023 தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடங்குவதற்குள் இப்பணியை நிறைவேற்றுவதென இக்கூட்டம் நிறைவேற்றிடும் வகையில், துண்டறிக்கைகள் மூலமாகவும், திண்ணைப் பிரச்சாரங்கள் மூலமாகவும், முக்கிய இடங்களில் முகாம்கள் அமைப்பது மூலமாகவும், வீடு தோறும் தேடிச் சென்றும் புதிய உறுப்பினர்களைக் கழகத்தில் இணைத்திடுவோம்." என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கடந்த 22.3.2023 அன்று நடைபெற்ற 'தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்' நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

2023 ஏப்ரல் 3ஆம் தேதி முதல் 2023 ஜூன் 3ஆம் தேதி வரை, "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டு" உறுப்பினர்களை சேர்த்தல் பணிகளை "உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்புடன் ஒரு கோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கழகத் தோழர்கள் மற்றும் நிர்வாகிகளும் மேற்குறிப்பிட்ட தேதி முதல் உறுப்பினர்களை சேர்க்கும் பணியினைத் தொடங்கி, உடனுக்குடன் படிவங்களை தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்தனர்.

அவ்வாறு தலைமைக் கழகத்தில் வரப் பெற்ற படிவங்கள் முறைப்படி பரிசீலனை செய்யப்பட்டு, புதியதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை தலைமைக் கழகம் தயாரித்துள்ளது.

முதற் கட்டமாக, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட **இரசீது எண். 1 முதல் எண். 2800 வரை** இப்புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் கடந்த 7.11.2023 முதல் 10.11.2023 தேதிகளில் முதற்கட்டமாகவும்; 27. 12.2023 முதல் 30.12.2023 வரை இரண்டாம் கட்டமாகவும்; 11.1.2024 முதல் 13.1.2024 வரை மூன்றாவது கட்டமாகவும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து;

தற்போது, நான்காவது கட்டமாக, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட **இரசீது எண். 2801 முதல் 4100 வரை** எண் கொண்ட இரசீதுகள் வைத்திருப்போர் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இருக்குமேயானால், அந்த ஒரிஜினல் ரசீதையும், தங்களிடம் உள்ள உறுப்பினர் சேர்த்தல் பட்டியலையும், **2024 ஜனவரி 29-ஆம் தேதி முதல் பிப்ரவரி 3-ஆம் தேதிக்குள்**, தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்து, இரசீது எண்ணையும், பட்டியலையும் சரி பார்த்து பெற்றுச் செல்ல வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புதிய உறுப்பினர்களை சேர்த்து பணம் செலுத்தி இரசீது பெற்றவர்கள், நேரில் வந்து உறுப்பினர் சீட்டுகள் பெற முடியாத நிலை ஏற்படுமாயின், அவர்களால் நியமித்து அனுப்பப்படும் முகவரிடம், தாங்கள் கைப்பட எழுதிய பரிந்துரை கடிதமும், ஒரிஜினல் இரசீதையும் கொடுத்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம். இரசீதின் ஜெராக்ஸ் நகல் ஏற்றுக் கொள்ளப்படாது.

**புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொண்டவர்கள், உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை உரியவரிடம் ஒப்படைத்து, அதற்குரிய அத்தாட்சி கடிதத்தை பெற்று, அக்கடிதத்தினை ஒருவார காலத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு கண்டிப்பாக அனுப்பி வைத்திட வேண்டும்.**

**உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்படும் மாவட்டங்கள்**
**தலைமைக் கழக இரசீது எண். 2801 முதல் 4100 வரை**

1) சென்னை வடக்கு
2) சென்னை வடகிழக்கு
3) சென்னை கிழக்கு
4) சென்னை மேற்கு
5) சென்னை தென்மேற்கு
6) சென்னை தெற்கு
7) திருவள்ளூர் கிழக்கு
8) காஞ்சிபுரம் வடக்கு
9) காஞ்சிபுரம் தெற்கு
10) ராணிப்பேட்டை
11) வேலூர்
12) திருப்பத்தூர்
13) திருவண்ணாமலை வடக்கு
14) விழுப்புரம் வடக்கு
15) கள்ளக்குறிச்சி வடக்கு
16) கள்ளக்குறிச்சி தெற்கு
17) கடலூர் மேற்கு
18) தஞ்சை தெற்கு
19) கரூர்
20) புதுக்கோட்டை வடக்கு
21) சேலம் மத்திய
22) நாமக்கல் மேற்கு
23) தருமபுரி மேற்கு
24) கிருஷ்ணகிரி கிழக்கு
25) கிருஷ்ணகிரி மேற்கு
26) கோவை வடக்கு
27) கோவை மாநகர்
28) ஈரோடு தெற்கு
29) நீலகிரி
30) மதுரை வடக்கு
31) மதுரை தெற்கு
32) தேனி தெற்கு
33) திருநெல்வேலி கிழக்கு

குறிப்பு : தலைமைக் கழக இரசீது எண்.4101க்கு மேல் உள்ள இரசீதுகளுக்கான உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**இரண்டாவது கட்டமாக வழங்கப்பட்ட இரசீது எண் 1001 முதல் 2800 வரையிலான உறுப்பினர் உரிமைச் சீட்டு பெற்றுக் கொண்டு செல்லாதவர்கள் உடனடியாக தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 27-01-2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலத்திற்கு உட்பட்ட கலைஞர் நெடுஞ்சாலை பீர்க்கன்காரணையில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நகர்ப்புற அரசு சுகாதார நிலையத்தை கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு திறந்து வைத்தார். உடன் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, மண்டல குழு தலைவர்கள் பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், எஸ்.சேகர், டி.ஆர்.கோபி, ராஜேஸ்வரி சங்கர், ரமணி ஆதிமுலம், புகழேந்தி, லயன் ஆர்.எஸ்.சங்கர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள் (து) அமைப்பாளர்கள்,அரசு அதிகாரிகள், கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் 2024

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 22-01-2024 அன்று மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ மாநகர / பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட "நிர்வாகிகள் சந்திப்பு" கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, "அண்ணா அறிவாலயத்தில்" நடைபெறும்.

| தேதி | நேரம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 28.01.2024 | காலை 9.00 மணி | நாமக்கல், ஈரோடு |
| | மாலை 3.00 மணி | பொள்ளாச்சி, தருமபுரி |
| 29.01.2024 | காலை 9.00 மணி | சிவகங்கை, விருதுநகர் |
| | மாலை 3.00 மணி | தென்காசி, திருநெல்வேலி |
| 30.01.2024 | காலை 9.00 மணி | தூத்துக்குடி, கன்னியாகுமரி |
| | மாலை 3.00 மணி | மதுரை, தேனி |
| 31.01.2024 | காலை 9.00 மணி | இராமநாதபுரம், கடலூர் |
| 01.02.2024 | காலை 9.00 மணி | சிதம்பரம், மயிலாடுதுறை |
| | மாலை 3.00 மணி | நாகப்பட்டினம், தஞ்சாவூர் |
| 02.02.2024 | காலை 9.00 மணி | வேலூர், அரக்கோணம் |
| | மாலை 3.00 மணி | விழுப்புரம், கள்ளக்குறிச்சி |
| 03.02.2024 | காலை 10.00 மணி | வடசென்னை, தென் சென்னை |
| | மாலை 3.00 மணி | மத்திய சென்னை, திருபெரும்புதூர் |
| 04.02.2024 | காலை 9.00 மணி | திருவண்ணாமலை, ஆரணி |
| | மாலை 3.00 மணி | பெரம்பலூர், திருச்சி |
| 05.02.2024 | காலை 9.00 மணி | கரூர், திண்டுக்கல் |
| | மாலை 3.00 மணி | காஞ்சிபுரம், புதுச்சேரி |

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (27.01.2024) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சென்னை, யானைகவுனி, கல்யாணபுரத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, எஞ்சியுள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்புப் பொறியாளர் இளம்பருதி, 5வது மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் தமிழ்ச்செல்வன், உள்ளாட்சிப் பிரதிநிதிகளை சேர்ந்த முரளி, ராஜசேகர், ராமமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் ராஜேஷ் ஜெயின், மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### கழகத்தின் அணையாத அகல்விளக்கை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும்

# சேலம் இளைஞர் அணியின் 2வது திருப்புமுனை மாநாடு!

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர் -
உயர்நிலை செயல்திட்டக்குழு
உறுப்பினர்



இன்றைய இளைஞர்கள்தான் எதிர்கால சமுதாயத்தின் வார்ப்படங்கள்! ஆம்! எதிர்கால சமுதாயக் கட்டமைப்பை உருவாக்கிடும் சிற்பிகள். உலக வரலாற்றில், சமூக - அரசியல் - பொருளாதார மாற்றங்களுக்கு அடித்தளமாகவும், அச்சாணியாகவும் செயல்பட்டவர்களும், பயன்பட்டவர்களும் இளைஞர்கள்தான்!! இந்த வரலாற்றின் பிரதிபலிப்பாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம், என்னும் காலத்தை வென்று தொடர்ந்து இயங்கிக்கொண்டேயிருக்கும் இனமான இயக்கத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது சிந்தனைகளை வெளிப்படுத்தும் கழக இதழ்களில் "தம்பிக்கு" என்ற கடிதங்களை தொடர்ந்து எழுதி, அந்தக்கடிதங்கள் மூலமாகப் பல லட்சக்கணக்கான இளைஞர்களை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்வீரர்களாகவும், செயல்தளபதியாகவும் உருவாக்கினார்கள் என்பது வரலாறு.

பேரறிஞர் அண்ணாவின் இதயத்தைப்பெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "உடன்பிறப்பே" என இளைஞர்களை விழித்து கடிதங்களைத் தீட்டினார். தன்னுடைய கடிதங்கள் மூலமாக, தந்தை பெரியாரின் சிந்தனைகளையும், பகுத்தறிவுக் கருத்துக்களையும், பேரறிஞர் அண்ணா வலியுறுத்திய திராவிட இனப் பெருமைகளையும், தமிழ் மொழியின் தொன்மையையும், பெருமையையும், தமிழனின், ஆற்றலையும் பல்துறை அறிவையும், தனக்கே உரித்தான மிடுக்கான தமிழ் நடையிலும், கவிதையிலும், நாடக வசனங்கள் மூலமாகவும் எடுத்துரைத்து, பல லட்சக்கணக்கான இளைஞர் பட்டாளத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் ஈர்த்தார்கள் என்பது மட்டுமல்ல, திராவிட இயக்கக் கொள்கைகள், வெற்றி பெற்றிட, அனைத்து வாலிபப்பட்டாளத்தையும் அறப்போர்க்களத்தில் போர்வீரர்களாக வியத்தகு முறையில் உருவாக்கிக் காட்டினார்கள்.

இந்த மறுமலர்ச்சி சகாப்தத்திற்குப் பின்னர் அடுத்த புதிய சகாப்தத்தின் தொடக்கமாக "உழைப்பு" "உழைப்பு" என்ற ஓய்வறியாச் செயல்பாட்டின் வடிவமாக நமக்குக்கிடைத்துள்ள தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் "உங்களில் ஒருவன்" என்ற தலைப்பில் இளைஞர்களை விழித்து, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியவர்களின் கருத்துக்களையும், சிந்தனைகளையும் ஒன்றுதிரட்டி, அதற்கு "திராவிட மாடல்" ஆட்சி என்கின்ற, என்றும் வரலாற்றில் அழிக்கமுடியாத ஓர் "ஆட்சி முறையை" அமல்படுத்தி அதன் அடித்தளமாக "சமூக நீதி - சமத்துவம் - பெண்ணுரிமை என்ற கோட்பாடுகளை உயர்த்திப்பிடித்ததன் மூலம், அகில இந்தியா அளவில், அனைத்து மக்களின் கவனத்தையும் ஈர்த்து, தடைக்கற்கள் எதுவரினும், திராவிட இயக்க வாலிபப்பட்டாளத்தின் தடந்தோள் வலிமை கொண்டு தகர்த்து தரைமட்டமாக்கிவிட்டு முன்னேறுவோம் என்ற இலக்குடன் - துணிச்சலுடன் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்தக்காலக்கட்டத்தில் மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு தமிழக விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி அவர்கள், இந்த சித்தாந்தப் போர்க்களத்தின் தளபதியாகப் பொறுப்பேற்று பல லட்சக்கணக்கான இளைஞர்களை ஒன்றுதிரட்டி சேலத்தில் வரலாற்றுத் திருப்புமுனை மாநாடு ஒன்றினை கடந்த 21.01.2024 நாள் நடத்திக்காட்டியுள்ளார்!

சேலம் பகுதி என்பது பாசமிகு பங்காளி, கழகத்தின் வாழ்நாள் போராளி வீரபாண்டியார், களம் கண்ட சேலம் மாவட்டம். இன்றும் பலவரலாற்றுப் பெருமைகளைக் கொண்டதுதான் சேலம்மண்! இங்கு இளைஞர் அணியின் மாநாட்டுத்தலைவரான மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநாட்டின் தொடக்கத்தில் 25 தீர்மானங்களை, பலலட்சக்கணக்கான இளைஞர்களும் செயல்வீரர்களும் கூடிய மக்களுக்கு மத்தியில் படித்து, மாநாட்டுப்பந்தலில் அமர்ந்திருந்த அனைத்து மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றினார்! அனைத்து தீர்மானங்களும், மாநில உரிமைகளையும், மாநிலமக்களின் தன்மானத்தையும் சுயமரியாதையையும் அடித்தளமாகக் கொண்டதாகவே அமைந்திருந்தது! அதுமட்டுமல்ல மாநிலங்கள் முழுமையான சுயாட்சித் தகுதிபெற்றவைகளாகவும், மத்தியில் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் கூட்டாட்சி நடைபெறும் வகையிலும் அதிகாரங்கள் மறுசீரமைக்கப்ட வேண்டுமெனவும் வலியுறுத்தும் முறையில் அமைந்துள்ளது.

இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் மாநில இளைஞர் அணிச்செயலாளரும் மாண்புமிகு அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தப் புரட்சிகரமான தீர்மானங்களை நிறைவேற்றியதன் மூலம் எத்தகைய தடைகளை மதவாதிகளும், ஆதிக்கசக்திகளும் உருவாக்கினால், அவற்றை தகர்த்து முன்னேறுவதற்கு தயாராக, பல லட்சக்கணக்கான இளைஞர்கள் தயாராக இருக்கிறோம், என்பதை தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, அகில இந்தியாவிற்கே எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது என்பதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ இயலாது!! எனவேதான் இந்த இளைஞர் அணிமாநாடு என்பது மதவெறிச்சக்திகளையும் ஆதிக்கசக்திகளையும், பாசிச சக்திகளையும், சுவடுதெரியாமல் அழித்துவிடும், சித்தாந்தப்போர்க்களமாகும். இந்தியா ஆங்கிலேயரிடமிருந்து விடுதலைபெற்ற பின்னர், அரசியல் சட்டப்படி தேர்தல் மூலம் அமைந்த எதிர்கட்சி மாநில அரசுகளுக்கு, ஒன்றிய அரசு இவ்வளவு பல்முனைத்தாக்குதல்களை நடத்தியதில்லை. அதிலும் குறிப்பாக ஒன்றிய அரசின் இந்த பல்முனைத் தாக்குதலில் முதல் இலக்காக அவர்கள் நிர்ணயித்திருப்பது "தமிழ் நாடுதான்". எத்தகைய எதிர்பார்ப்புகளையும் சந்திக்க, களம் காண்பதற்கு தயார் என எதிர்குரல் கொடுக்கும் பலலட்சம் இளைஞர்களை ஒன்றுதிரட்டிய மாநில இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு தமிழக அமைச்சர், சேலத்தில் நடத்திக்காட்டிய இரண்டாம் இளைஞர் அணிமாநாடு தமிழக வரலாற்றில் ஓர் திருப்புமுனை மாநாடுதான்!!

மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியாக கழகத்தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் உரையாற்றினார். அவரது உரை என்பது திராவிட மாடல் ஆட்சியின் தாக்கத்தையும், தமிழ் நாட்டின் வளர்ச்சியையும், சமூகநீதிக் கோட்பாட்டின் பயனையும், எல்லோருக்கும் எல்லம் என்ற மனிதநேயக்கோட்பாடுகளையும் செயல்படுத்துவதிலும், அதற்குரிய அதிகாரங்களை பெறுவதிலும், மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பதை முறைப்படுத்தி, வகைப்படுத்துவதிலும் திராவிட மாடல் ஆட்சி எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளில், எத்தகைய குறுக்கீடுகளை ஒன்றிய அரசு உருவாக்கினாலும், குறுக்கீடுகளைப் புறந்தள்ளிவிட்டு, சமூகநீதியும், சமத்துவமும் அனைத்து மக்களுக்கும் முழுமையாக பயனளிக்கும் வகையில் எங்களது பணி தொய்வின்றித் தொடரும் என்று கூறியதுடன் இத்தகைய காலக்கட்டத்தில், இளைஞர் அணிச்செயலாளரகப் பொறுப்பேற்றுக் கொண்டு மாநாட்டின் மூலம் இந்த மாபெரும் வெற்றியைப் பெற்றிட முயற்சிகள் மேற்கொண்ட மாநில இளைஞர் அணிச்செயலாளர் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்களை மன நெகிழ்ச்சியுடன் பாராட்டினார்!

மாநாட்டுப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்கள் தலைமையில் மேற்கொண்ட மாவட்டக்கழகத்தின் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரையும் பாராட்டினார்கள். மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்களை "நேரு என்றால் மாநாடு - மாநாடு என்றால் நேரு" எனப் பாராட்டி மாண்புமிகு அமைச்சர் நேருவின் அயராத உழைப்பிற்குப் பெருமை சேர்த்தார்கள். சேலம் மாவட்டக்கழகங்களின் செயலாளர்கள் இரண்டு முறை இளைஞர் அணி மாநாடு தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்ட சூழ்நிலையிலும் மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்களின் வழிக்காட்டுதலில், மிகச்சிறப்பாக செயல்பட்ட மாவட்டக்கழகத்தின் செயலாளர்கள் சிவலிங்கம், வழக்கறிஞர் ராஜேந்திரன், செல்லக்கணபதி அவர்களோடு இணைந்து பணியாற்றிய மாவட்டக்கழகத்தின் நிர்வாகிகள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்ட நிலையிலும், ஏற்கனவே ஏற்பாடுசெய்யப்பட்ட பந்தல் அமைப்பு அலங்கார வளைவுகள், மாநாட்டுக்கு வருபவர்களுக்கான ஏற்பாடுகள், தங்குமிடங்கள் ஆகிய பணிகளை எவ்விதக் குழப்பமுமின்றி சிறப்பாக அமைந்தமைக்கு, மூன்று மாவட்டக் கழகங்களின் அயராது ஓய்வின்றி உழைத்த உழைப்பின் பயனும், பலனும்தான். மாநாட்டு ஏற்பாடுகளை கண்டோர் வியக்கும் வண்ணம் சிறப்படையச் செய்துள்ளன. அன்பிற்குரிய மாவட்டக் கழகச்செயலாளர்கள் ராஜேந்திரன் அவர்களும் சிவலிங்கம் அவர்களும், எப்பொழுதும் எந்த விபரங்கள் கேட்டாலும், சோர்வின்றி மகிழ்ச்சியுடன் பதிலுரைத்த பாங்கும், பணிமுடித்துக் கொடுத்த நேர்த்தியும் பாராட்டத்தக்கது.

பல மாநாடுகளை நடத்திப் பயிற்சிபெற்றவன் என்ற முறையில், அதில் ஏற்படும் சிரமங்களையும், சிக்கல்களையும் நான் அறிவேன். எனவே இந்த இக்கட்டான அரசியல் சூழ்நிலையில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநாட்டுப்பணியினை சிறப்பாகப் பார் போற்றும் வகைகளில் நடத்தி முடித்து, இது ஓர் திருப்புமுனை மாநாடு என களத்தில் நிரூபித்துக்காட்டிய அனைவருக்கும், உலக நாடுகள் முழுமையும் பரவி வாழும் அனைத்து தமிழ் மக்கள் சார்பாக உள்ளம் நெகிழ்ந்து வாழ்த்துகிறோம் - வணங்குகிறோம்.

# இளைஞர் அணி மாநாட்டுத் தீர்மானங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க

# அனைத்து ஊர்களிலும் தெருமுனைக் கூட்டங்களை எழுச்சியுடன் நடத்திடுவீர்!

## மாவட்ட - மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, ஜன. 28 –**

**சென்னை – பசுமை வழிச் சாலையில் உள்ள தமது இல்லமான ‘குறிஞ்சியில்’ நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற, மாவட்ட – மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் உரையாற்றிய கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ‘‘இளைஞர் அணி மாநில மாநாட்டுத் தீர்மானங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க, ஊர்கள் தோறும் தெரு முனைப் பிரச்சாரக் கூட்டங்களை எழுச்சியுடன் நடத்திடுவீர்!’’ என வேண்டுகோள் விடுத்தார்.**



திமுக இளைஞர் அணியின் மாவட்ட மாநகர மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் 26.1.2024 வெள்ளிக்கிழமை சென்னை பசுமை வழிச் சாலையில் நடைபெற்றது.

இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நாடு முழுவதும் எடுத்துச் செல்வது, ஒன்றிய -நகர-பகுதி பேரூர் நிர்வாகிகளைத் தேர்வு செய்வது... உள்பட இளைஞர் அணியில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆக்கப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை வகித்து ஆற்றிய உரை வருமாறு:-

எனக்கு முன்பு சிறப்புரை யாற்றிய, சிற்றுரை ஆற்றிய அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாகர்கோவில் மாநகர அமைப்பாளர் சி.டி.சுரேசுக்கு அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

கோவை தெற்கு மாவட்டத் துணை அமைப்பாளர் சகோதரர் தென்றல் மணிமாறன், இங்கு பேசும்பொழுது உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு அவர்களின் இல்லத்தில் ஒரு சின்ன பிரச்சினை. பா.ஜ.க காரர்கள் வேண்டும் என்றே அவரிடம் வம்பு இழுத்து, அவரை உசுப்பேற்றி இருக்கிறார்கள். பொய்ப் பிரச்சாரம் செய்து நம்மைச் சீண்டுவது தான் எப்போதுமே அவர்களுக்கு வேலை. அந்தப் பிரச்சினையை சுமூகமாகத் தீர்த்து வைத்தோம்.

**அத்தனை பேரும் துணை நிற்பவர்கள்தான்!**

மணிமாறன் இங்கே பேசும் போது, விரைவில் நான் துணை முதலமைச்சராக வேண்டும் என்று சொன்னார். அதற்கு ஏற்கனவே பதில் சொல்லி இருக்கிறேன். அத்தனை அமைச்சர்களுமே முதல்வருக்குத் துணையாகத்தான் இருக்கப் போகிறோம். இன்னும் சொல்லப்போனால் இளைஞர் அணித் தம்பிமார்கள் நீங்கள் அத்தனை பேரும் நம்முடைய முதலமைச்சருக்குத் துணை நிற்பவர்கள்தான்.

நம்முடைய தென்றல் மணிமாறனுக்கு எப்படித் துணையாக நின்றோமோ அதேபோல் எப்பொழுதுமே கழகத்தின் தொண்டனுக்கு, குறிப்பாக இளைஞர் அணித் தம்பிமார்களுக்குத் தலைவர் அவர்களும் நானும் துணை நிற்போம்.

அடுத்து, திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் பனங்குடி குமார் இந்த மாநாட்டை நடத்தி முடித்ததற்காக எனக்குப் பாராட்டு விழா நடத்த வேண்டும் என்றார். நமக்குப் பணிகள் நிறைய இருக்கின்றன. தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களை நடத்த வேண்டும்.

அந்தமான் மாநில அமைப்பாளர் ராஜா மிகுந்த உணர்வோடு பேசினார். மாநாட்டுக்காக இரண்டு முறை விமான டிக்கெட் புக் பண்ணினேன். இரண்டு முறையும் கேன்சல் ஆகிவிட்டது என்றார். விமான டிக்கெட்டுக்கு காசு கேட்பாரோ என்று நான் கூட பயந்தேன்.

அதேபோல் நீலகிரி மாவட்ட அமைப்பாளர் இமயம் சசிகுமார், மாநாட்டு நினைவு இன்னும் மனதில் இருந்து போகவில்லை. திடலிலேயே இருக்கலாம் போல் இருக்கிறது என்றார். தயவு செய்து சீக்கிரம் வீட்டுக்குப் போங்க. மாநாட்டுத் திடலிலேயே உட்கார்ந்து இருக்காதீர்கள். வீட்டில், மாநாடு இன்னும் நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு, வந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

**எனது மனதுக்கு நெருக்கமான இளைஞர் அணிப் பொறுப்பு!**

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் சகோதரர் பிரகாஷ்க்கு என் மேல் என்ன கோபம் என்று தெரியவில்லை. இளைஞர் அணியிலிருந்து என்னை ‘ப்ரமோட்’ பண்ணி தாய்க் கழகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று சொல்கிறார். அப்துல் மாலிக்கும் இதே கருத்தில் பேசினார்.

ஒரு மாநாடுதான் நடத்தினேன். அதற்குள் என்னை இளைஞர் அணியிலிருந்து அனுப்ப நினைக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர் என என்னென்ன பொறுப்புகள் வந்தாலும், என் மனதுக்கு மிகவும் நெகிழ்ச்சியான நெருக்கமான ஒரு பொறுப்பு என்றால் அது இந்த இளைஞர் அணிச் செயலாளர் பொறுப்புதான்.

மாநாட்டு மேடையில் தலைவர் அவர்களை வைத்துக்கொண்டே சொன்னேன், “இளைஞர் அணிக்கு பிராண்ட் அம்பாஸிடர் நீங்கள்தான். நீங்கள் இப்போது கழகத் தலைவராக இருக்கலாம். எங்களுடைய இளைஞர் அணிக்கு எப்பொழுதுமே நீங்கள்தான் செயலாளர்” என்று பெருமையோடு சொன்னேன்.

அதேபோல் இணைப்புரை ஆற்றிய சகோதரர் ஜி.பி.ராஜாவுக்கு தொகுத்து வழங்கத்தான் வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், கிடைக்கின்ற வாய்ப்புகளில் எல்லாம் அவர் பேருரை ஆற்றிவிட்டார். இப்படி பேசிய அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

**இந்திய ஒன்றியமே உற்றுநோக்கிய மாநாடு!**

ஒட்டுமொத்த இந்திய ஒன்றியமே உற்று நோக்கிய இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு மிகப்பெரிய ஒரு தெம்பை நமக்கு கொடுத்திருக்கிறது. இந்தியாவில் இனிமேல் ஒரு அரசியல் இயக்கம், இப்படி ஒரு மாநாடு நடத்த முடியாது என்கின்ற அளவிற்கு நாம் நடத்தி முடித்துள்ளோம். ஆறு லட்சம் பேர் கலந்துகொண்ட இந்த மாநாட்டிற்காக உழைத்த உங்கள் ஒவ்வொருவரையும் பாராட்ட வேண்டும் என்பதற்காகத்தான் நாம் இன்று இந்த ஆலோசனைக் கூட்டத்தை கூட்டி இருக்கிறோம். எனவே இங்கு வந்திருக்கக்கூடிய இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேர்தலுக்கு இரண்டு மாதங்கள் முன்னாடி நடக்கப் போகின்ற மாநாடு. தாய்க் கழகமே நடத்தியிருக்கலாம். ஆனால், இளைஞர் அணி தம்பிமார்கள் நாம் நடத்திக் காட்டுவோம் என்ற அந்த நம்பிக்கையை தலைவர் நம் மீது வைத்திருக்கிறார். அதற்கு தலைவர் அவர்களுக்கு நன்றி.

**நேரு அண்ணன் அவர்களுக்கு நன்றி!**

இந்த மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் கழக முதன்மைச் செயலாளர் அண்ணன் நேரு அவர்களுடைய உழைப்பு கொஞ்சம் நஞ்சம் கிடையாது. சேலத்திலேயேதான் இருந்தார். இரண்டு முறை தள்ளி போனது. “பரவாயில்லை, தம்பி பார்த்துக் கொள்ளலாம். தலைவர் என்ன சொல்கிறாரோ அதை செய்து காட்டுகிறேன்” என்றார். இந்த மாநாட்டை, வெற்றி மாநாடாக மாற்றிக் காட்டியதற்கு மிக முக்கிய காரணம் அண்ணன் நேரு அவர்கள்தான்.

அதேபோல சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் ராஜேந்திரன், அண்ணன் எஸ்.ஆர்.சிவலிங்கம், அண்ணன் செல்வகணபதி ஆகியோருக்கும் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். கழகப் பொதுச் செயலாளர், கழகப் பொருளாளர் உள்ளிட்ட அனைத்து தலைமை கழக நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாநாட்டைத் திறந்து வைத்த மாணவர் அணிச் செயலாளர் எழிலரசன் அவர்களுக்கும் கழகத்தின் இரு வண்ண கருப்பு சிவப்புக் கொடியை ஏற்றி வைத்த கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அத்தை கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும் இந்த இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நன்றி சொல்கின்றது.

**நீங்கள் கொடுத்த உழைப்புதான் வெற்றிக்குக் காரணம்!**

மாநாட்டின் வெற்றிக்காக உழைத்த இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றி. முக்கியமாக, இங்கு வந்திருக்கக்கூடிய இளைஞர் அணியின் இரத்த நாளங்களான நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி. மாநாட்டின் வெற்றி என்பது என் தனிப்பட்ட உழைப்புக்குக் கிடைத்த வெற்றி கிடையாது. என்னை விட களத்தில் நீங்கள் கொடுத்த உழைப்புதான் இந்த மாநாட்டின் வெற்றிக்குக் காரணம்.

**வருவாய் மாவட்டங்களில் செயல் வீரர்கள் கூட்டம்!**

மாநாட்டுக்கு இளைஞர்களை எல்லாம் கூட்டிக் கொண்டு வர வேண்டும். அதை எப்படி ஒருங்கிணைப்பது என்று யோசித்தபோதுதான் தமிழ்நாடு முழுவதும் வருவாய் மாவட்டங்களில் செயல் வீரர்கள் கூட்டத்தை நடத்துவோம் என்று ஆரம்பித்தோம். செயல்வீரர் கூட்டம் மூலமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்களுக்கும் நம்முடைய இளைஞர் அணி மற்றும் தம்பிமார்களுக்கும் மிகப் பெரிய ஒரு ஒருங்கிணைப்பு ஏற்பட்டது. அந்த ஒருங்கிணைப்பை மாநாட்டுத் திடலிலும் என்னால் பார்க்க முடிந்தது. அந்த ஒருங்கிணைப்பு என்றைக்கும் தொடர வேண்டும் என்று விரும்புகின்றேன்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் முதல் கூட்டம் ஆகஸ்ட் 20 ஆம் தேதி நடத்தினோம். அந்தக் கூட்டத்திற்கான மேடையை மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களும் அப்துல் மாலிக் கும் உதயசூரியன் மாதிரி அமைத்தார்கள். அதேமாதிரி திருப்பூர் மாவட்ட செயல் வீரர் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் `கோபாலபுரம் இல்லம்’ போன்று அமைத்து பெருமைப் படுத்தினார்கள்.

நாமக்கல் மாவட்டம் சொல்லவே வேண்டாம். இப்போதுதான் இளைஞர் அணியிருந்து மாவட்டக் கழகச் செயலாளர்களாக ஆகியிருக்கிறார்கள். செயல்வீரர் கூட்டத்திற்கான அரங்கத்தை நம்முடைய இளைஞர் அணி தலைமையகம் `அன்பகம்’ வடிவத்தில் அமைத்துச் சிறப்பித்தார்கள். முன்னாள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் பேரில் கொடி மேடை, அவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி என்று புதிது புதிதாகச் செய்தார்கள். இப்படி ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விஷயம் ஸ்பெஷலாக நடந்தது.

**மாநாட்டிற்கு வாரி வழங்கிய நிதி!**

மாநாட்டுக்கு மிக முக்கியமான விஷயம் நிதி. நம்முடைய மாநிலத் துணைச் செயலாளர்கள் சேர்ந்து இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்திலேயே ரூபாய் 51 லட்சம் நிதி அளித்தார்கள்.

அதைத்தொடர்ந்து, ஒவ்வொரு செயல்வீரர் கூட்டத்திலும் மாநாட்டு நிதியை மாவட்ட கழகச் செயலாளர்களும் இளைஞர் அணி அமைப்பாளர்களும் வாரி வாரி வழங்கினார்கள். சகோதரர் ஜோயல் அவர்கள் ஒருங்கிணைக்கும் மண்டலத்தில் இருக்கக்கூடிய அத்தனை மாவட்ட அமைப்பாளர்களையும் அழைத்து தலா ரூபாய் 10 லட்சம் நிதி கொடுக்கச் செய்தார். இதுபோல ஒவ்வொருவரும் இந்த மாநாடு வெற்றிபெற வேண்டும் என்று கடுமையாக உழைத்திருக்கிறோம்.

மாநாட்டிற்கு மொத்தம் எவ்வளவு நிதி வந்திருக்கிறது, எவ்வளவு செலவு ஆகியிருக்கிறது என்று இன்னும் பார்க்கவில்லை. துணைச் செயலாளர் பிரகாஷ்தான் அதற்குப் பொறுப்பு. அவர் சொன்னவுடன் அதை உங்கள் அத்தனை பேருக்கும் சொல்வது என்னுடைய கடமை.

**6 லட்சம் பேர் கலந்து கொண்ட மாநாடு!**

ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் எத்தனை இளைஞர்கள் மாநாட்டுக்கு வருவார்கள் என்று செயல்வீரர் கூட்டத்தின்போது பட்டியல் கேட்டோம். அப்படி வந்த லிஸ்ட்டை பார்த்தால், கிட்டத்தட்ட ஐந்தரை லட்சம் பேர் இருந்தார்கள். எனக்கு அப்போது நம்பிக்கை இல்லை. 5 லட்சம் பேர் எல்லாம் வரமாட்டார்கள், அதிகபட்சம் 2 லட்சம் பேர்தான் வருவார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் என்ன சொன்னீர்களோ அதைவிட அதிகமாகக் கிட்டத்தட்ட 6 லட்சம் பேர் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்கள். மாவட்டச் செயலாளர்களும் நீங்களும் சொன்னபடியே அவ்வளவு பேரையும் அழைத்து வந்தீர்கள்.

இளைஞர் அணி சார்பாக அடித்த அத்தனை டீசர்ட்டையும் சரியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கொண்டு சேர்த்த சகோதரர் ஜோயல் அவர்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் மாநாட்டுத் திடலில் ஒருத்தர் கூட நாம் கொடுத்த டீசர்டை போடாமல் வரவில்லை.

அந்த அளவுக்கு மாநாட்டின் வெற்றிக்காக நாம் அனைவரும் பணிகளை மேற்கொண்டோம். அன்பகத்திலிருந்து நாங்கள் தனியாக ஒரு மாநாட்டுப் பாடல் பண்ணினோம் என்றால் எங்களுக்குப் போட்டியாக ஜோயல் ஒரு பாட்டு போடுகிறார். அவருக்குப் போட்டியாக எபினேசர் இரண்டு பாட்டோடு வருகிறார்.

**கொள்கை விளக்கப் பாடல்கள்!**

இது ஒரு நல்ல விஷயம். நாம் அத்தனைப்பேரும் கொள்கை விளக்கப் பாடல்களை உருவாக்க வேண்டும். வெறும் சினிமா பாடல்களை நம்பி நம்முடைய இயக்கம் இருக்கக் கூடாது. இந்த மூன்று பாடல்கள் இருக்கிறது. அனைத்து இளைஞரணி நிகழ்ச்சிகளிலும் நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்கு முன்போ, முடிந்த பிறகோ இந்தப் பாடல்களை ஒளிபரப்ப வேண்டும்.

மாநாட்டுக்காக அமைக்கப்பட்ட குழு மிகச் சிறப்பாக உங்களுடைய பணிகளை செய்து இருக்கிறீர்கள். ஒவ்வொரு குழுவும் ராணுவ கட்டுப்பாட்டோடு உங்களுடைய பணிகளை நீங்கள் மேற்கொண்டீர்கள். நான் கூட சேலம் மாநாட்டுத் திடலுக்கு மூன்று முறைதான் வந்தேன். ஆனால் மாநாட்டுக் குழுவில் இருக்கக்கூடிய நீங்கள் அத்தனை பேரும் பலமுறை மாநாட்டுத் திடலில் கூடி மாநாட்டுப் பணிகளை மேற்கொண்டீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள்.

**சிறப்பாக அமைந்திருந்த மாநாட்டு மலர்!**

மாநாட்டு மலர் ரொம்ப சிறப்பாக வந்திருக்கிறது. முதலமைச்சர் தொடங்கி சமீபத்தில் இளைஞர் அணியிலிருந்து தாய்க் கழகத்திற்குப் பொறுப்புக்குச் சென்ற அத்தனை பேரின் இளைஞர் அணி பணிகளை அந்த மலரில் பகிர்ந்திருக்கிறார்கள்.

மலர்க் குழுவின் செயலாளர் ஜெயக்குமார் உள்ளிட்ட டீம் அன்பகத்திலேயே தங்கி இருந்து மலர் தயாரிக்கின்ற அந்தப் பணிகளை எல்லாம் ஒருங்கிணைத்தார்கள். இந்த மாநாட்டு மலரைச் சிறப்பாகக் கொண்டு வருவதற்காக மலர் குழு, இந்தியா கூட்டணி ஒருங்கிணைப்புக் குழு மற்றும் அன்பகத்திலிருந்து உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

எங்கேயாவது ஒரு சின்ன தவறு நடந்துவிடாதா என்று எதிர்க்கட்சியினர் காத்துக் கொண்டிருந்தார்கள். அ.தி.மு.க மதுரையில் மாநாடு நடத்தினார்கள். அந்த மாநாட்டிற்கு பெயரே புளியோதரை மாநாடு. ஆனால் நம்முடைய மாநாட்டில் அது மாதிரி ஒரு சின்ன சம்பவம் கூட நடக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் சாப்பாடு பற்றவில்லை என்ற ஒரு சின்ன குறைதான். அந்த அளவுக்குக் கூட்டம்.

**‘தி.மு.க. பைக் ரைடர்ஸ்’ டீம் விழிப்புணர்வு!**

இந்த மாநாட்டை தமிழ்நாடு எங்கும் பேச வைத்தார்கள் என்றால் அது நம்முடைய ‘தி.மு.க பைக் ரைடர்ஸ்’ டீம்தான். மாநாட்டின் நோக்கத்தையும் அது தொடர்பான விழிப்புணர்வையும் பட்டி தொட்டி எங்கும் கொண்டு சென்ற அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**‘ட்ரோன் ஷோ’ புதுமையான நிகழ்ச்சி!**

அது மட்டுமல்ல மாநாட்டிற்கு முதல் நாள் நடந்த ட்ரோன் ஷோ. இந்திய அரசியலிலேயே ஒரு புதுமையான நிகழ்ச்சியாக இருந்தது. நான் கூட இதுவரைக்கும் இது போன்ற நிகழ்ச்சியை பார்த்தது கிடையாது. அசந்து போய் விட்டேன். அந்த அளவுக்கு ட்ரோன் ஷோ நமது மாநாட்டிற்கு ஒரு மிகப் பெரிய எழுச்சியை கொடுத்தது. அந்தக் குழுவுக்கு வாழ்த்துகள்.

> **“வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் மிக மிக முக்கியமான ஒரு தேர்தல். ‘இந்தியா’ கூட்டணி மிகப்பெரிய வெற்றியை பெற வேண்டும். அப்போதுதான் மாநில உரிமைகள் மீட்பு என்கின்ற நம்முடைய மாநாட்டின் லட்சியத்தை அடைய முடியும். ‘வர இருப்பது நாடாளுமன்றத் தேர்தல்தானே’ என அலட்சியமாக இருந்து விடக்கூடாது. இந்த தேர்தலின் வெற்றி 2026 சட்டமன்றத் தேர்தலின் வெற்றிக்கு வகை செய்யும் வகையில் இருக்கவேண்டும்.”**

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# மாவட்ட - மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

அன்றைக்கே நிறைய மாவட்டக் கழகச் செயலாளர்கள் மூத்த முன்னோடிகளெல்லாம் போன் செய்து, ‘இந்த ஒரு நிகழ்ச்சி போதும். மாநாடு வெற்றி’ என்று சொன்னார்கள். தொழில்நுட்பத்தின் மூலமாகவும் நம்முடைய கருத்துக்களை நம் இயக்கத்தின் வரலாற்றை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு அது மிகச் சிறந்த ஒரு எடுத்துக்காட்டு.

மாநாட்டுச் சுடரை சென்னை அண்ணா சாலை பெரியார் சிலையில் இருந்து தொடங்கி செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி வழியாக சேலம் மாநாட்டுத் திடலுக்கு வந்தடைந்தது. அவர்களுக்கும் எனது வாழ்த்துகள்.



சென்னை – பசுமை வழிச் சாலையில் உள்ள ‘குறிஞ்சி’ இல்லத்தில், நேற்று முன்தினம் மாலை, தி.மு.க. இளைஞரணி மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர்ககள் கூட்டத்திற்கு – கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்தக் கூட்டத்தில் இளைஞர் அணி மாநில துணை செயலாளர்கள் ஜோயல், இன்பாரகு, இளையராஜா, ப.அப்துல்மாலிக், பிரகாஷ், பிரபு, ராஜா, சீனிவாசன், ஆனந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, தனுஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், ஜெ.ஜெ.எபினேசர், பிரபாகர்ராஜா, புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர் சம்பத் உள்ளிட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் இல்லாததே எனக்கு இருந்த ஒரே ஒரு குறை!

இந்த மாநாட்டில் எனக்கு இருந்தது ஒரே ஒரு குறை தான். இந்த மாநாட்டை பார்ப்பதற்கு நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும், இனமான பேராசிரியர் தாத்தா அவர்களும் இல்லையே என்ற அந்த ஒரு குறை தான். அவர்கள் இருந்திருந்தால் இளைஞர் அணி தம்பிமார்கள் உங்கள் அத்தனை பேரையும் ஆரத் தழுவி வாழ்த்தியிருப்பார்கள். இந்த எழுச்சியை பார்த்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்து இருப்பார்கள். ஆனால் கலைஞர், பேராசிரியர், பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் மறு உருவமாக அந்த மாநாட்டு மேடையில் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

மாநாடு வெற்றியடைந்துவிட்டது, நம்முடைய பணிகள் முடிந்து விட்டது என்று நினைக்காதீர்கள். இப்போதுதான் நம்முடைய பணிகளை நாம் மாநாட்டில் இருந்து தொடங்கியுள்ளோம் என்று எண்ணுங்கள்.

### நாடாளுமன்றத் தேர்தல் பணி!

மாநில உரிமை மீட்பு மாநாட்டில் 25 சிறப்பான தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறோம். அந்த 25 தீர்மானங்களை முன்னிறுத்தி தமிழ்நாடு முழுக்க மாவட்டம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் கிளை வரை தெருமுனை பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி நம் தீர்மானங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்கான பணிகளில் நீங்கள் ஈடுபட வேண்டும்.

சமீபத்தில் கழகத்தின் பேச்சாளர்களுடன் ஒரு சந்திப்பை நடத்தினேன். முன்பு மாதிரி தெருமுனைப் பிரச்சாரங்களுக்கு எங்களை யாரும் அழைப்பதில்லை என்று வருத்தப்பட்டார்கள். அன்பகத்தில் இருந்து அவர்களின் விவரங்களை ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் பிரித்துக் கொடுக்கிறேன். மிகப்பெரிய செலவு பண்ண தேவையில்லை. எனவே தெருமுனைப் பிரச்சாரங்களை நாம் மேற்கொள்ள வேண்டும்.

தேர்தல் விரைவில் வர இருக்கிறது. இன்னும் நான்கு, ஐந்து நாட்களில் அறிவிப்பு வந்துவிடும். ஏப்ரல் 14 இல் இருந்து 18 வரை உள்ள ஏதாவது ஒரு தேதியில் தேர்தல் இருக்கும் என்று தேர்தல் தேதியே கிட்டத்தட்ட முடிவாகிவிட்டதாக சொல்கிறார்கள். இன்னும் 55 முதல் 60 நாட்கள் தான் நம்முடைய கையில் இருக்கிறது.

தேர்தல் வேலைகளையும் இளைஞர் அணி பணிகளையும் நாம் சமமாக செய்ய வேண்டும். மாநிலத் துணைச் செயலாளர்களோடு கலந்து பேசி விரைவில் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள் நியமனம் செய்யப்படுவார்கள். அதிகபட்சம் பிப்ரவரி மாத இறுதிக்குள் அந்த அறிவிப்புகள் வெளியாகும்.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு 234 தொகுதிகளிலும் கலைஞர் நூலகத்தை திறப்பது, வருவாய் மாவட்டம்தோறும் மாரத்தான் போட்டிகளை நடத்துவது, பேச்சுப்போட்டிகளை நடத்தி 100 இளம் பேச்சாளர்களை தலைமைக் கழகத்துக்கு தேர்வு செய்து தருவது... என நம்முன் பணிகள் காத்திருக்கின்றன.

### இல்லந்தோறும் இளைஞர் அணி!

‘இல்லந்தோறும் இளைஞர்’ அணி என்ற முன்னெடுப்பின் மூலம் உறுப்பினர் சேர்க்கும் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுக்கள். குறிப்பாக பி.எல்.ஏ2 பொறுப்பாளர்களோடு சேர்ந்து அந்தப் பணிகளை நீங்கள் செய்தது உண்மையிலேயே நல்ல ரிசல்டை நமக்கு கொடுத்திருக்கிறது.

ஆனால், சில இடங்களில் இல்லம்தோறும் இளைஞர் அணி பணிகள் இன்னும் நிறைவடையாமல் இருக்கிறது. அந்தப் பணிகளையும் சீக்கிரம் முடியுங்கள். அதற்கான படிவங்களை அன்பகத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் மிக மிக முக்கியமான ஒரு தேர்தல். ‘இந்தியா’ கூட்டணி மிகப் பெரிய வெற்றியை பெற வேண்டும். அப்போதுதான் மாநில உரிமைகள் மீட்பு என்கின்ற நம்முடைய மாநாட்டின் லட்சியத்தை அடைய முடியும்.

‘வர இருப்பது நாடாளுமன்றத் தேர்தல்தானே’ என அலட்சியமாக இருந்து விடக்கூடாது. இந்த தேர்தலின்வெற்றி 2026 சட்டமன்றத் தேர்தலின் வெற்றிக்கு வகை செய்யும் வகையில் இருக்கவேண்டும்.

### சமூக வலைத்தளத்தில் பிரச்சாரம்!

களத்தில் நாம் ஸ்ட்ராங் என்பது தெரியும். சமூக வலைத்தளத்தில் நாம் அந்த அளவிற்கு பலமாக இல்லை. அதை நாம் உணர்ந்துதான் ஆக வேண்டும். இன்றைக்கு உங்களுக்கு நினைவுப் பரிசாக டேப் (டேப்லேட்) கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு செயலி இன்ஸ்டால் செய்து வைத்திருக்கிறோம்.

அதில் எப்படி இயங்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள். சமூக வலைத்தளத்தில் செயல்படுவது குறித்து சமீபத்தில் தகவல் தொழில்நுட்ப அணியின் பயிற்சி பாசறைக் கூட்டம் நடந்தது.

தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளர் என்னை தொலைபேசியில் அழைத்து, ‘இளைஞர் அணியிலிருந்து பெரிதாக யாரும் கலந்து கொள்ளவில்லை’ என்று சொன்னார். அதில் எனக்கு சின்ன வருத்தம் இருக்கிறது. அதற்காகத்தான் உங்களுக்கு இன்றைக்கு டேப் (TAB) கொடுத்திருக்கிறேன். இனிமேல் நீங்கள் அத்தனை பேரும் சமூக வலைத்தளங்களில் சிறப்பாகச் செயல்பட வேண்டும். ஏனென்றால் இப்போது களத்தில் அரசியல் செய்வது எவ்வளவு முக்கியமோ அதே அளவு சமூக வலைத்தளத்திலும் இயங்குவது முக்கியமாகிறது.

### தி.மு.கவுக்கு மட்டும்தான் வரலாறு உண்டு!

மக்களிடம் உண்மை சென்று அடைவதை விட பொய், வதந்தி சீக்கிரம் போய் சேர்ந்து விடுகிறது. ஆனால் நம்முடைய இயக்கத்திற்கு மட்டும்தான் வரலாறு இருக்கிறது. தலைவருடைய வரலாறு இருக்கிறது. இயக்கத்தின் வரலாறு இருக்கிறது. கொள்கையும் இருக்கிறது. ‘உங்கள் கொள்கை என்னவென்று’ அ.தி.மு.க. காரரிடம் சென்று கேட்டுப் பாருங்கள். அவர்களுக்கு இருப்பது ஒரே கொள்கைதான். அது, தி.மு.கவை எதிர்ப்பது மட்டுமே.

அ.தி.மு.க நிறுவனர், கலைஞரின் நெருங்கிய நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்த நாள் விழா மூன்று நாட்களுக்கு முன்பு நடந்தது. திருப்பத்தூரில் அந்த நிகழ்ச்சிக்காக ஒரு போஸ்டர் அடிக்கிறார்கள். அந்த போஸ்டரில் அந்தக் கட்சியின் மாநில நிர்வாகி, எம்.ஜி.ஆர். அவர்களின் புகைப்படத் திற்கு பதிலாக நடிகர் அரவிந்த்சாமியின் புகைப்படத்தை போட்டு அடித்து விட்டார்கள். இந்த மாதிரியான ஒரு இயக்கத்தை எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? எம்.ஜி.ஆர் யார்? நடிகர் அரவிந்த்சாமி யார் என்றே அவர்களுக்குத் தெரியவில்லை.

என்னோடு பயணிக்கின்ற மணிகண்டன், என்னுடைய பேச்சுக்களை அவர்தான் தயார் செய்து கொடுப்பார். அதுவும் இந்த செயல் வீரர் கூட்டம் மாவட்டம், மாவட்டமாகச் சுற்றிக் கொண்டே இருந்தோம். அப்போது அவர்தான் என்னுடன் இருந்து என்னென்ன பேச வேண்டும், இந்த மாவட்டத்தில் என்ன பிரச்சனை, எப்படிப் பேச வேண்டும் என்று அவர்தான் குறிப்பெடுத்துத் தருவார். இந்த நேரத்தில் அவருக்கு என்னுடைய நன்றி.

அதேபோல் நம் இளைஞர் அணியின் ஒருங்கிணைப்பாளர் அன்பகம் செந்தில் அவர்களுக்கு நன்றி. இந்த மாநாட்டின் வெற்றிக்குப் பாதி காரணம் செந்தில் அவர்களின் ஒருங்கிணைப்புதான். இருவரும் கிட்டத்தட்ட கணவன் மனைவி மாதிரி. காலையில் சண்டை போட்டுக் கொள்வோம். மாலையில் காரில் ஒன்றாகத்தான் போவோம். ஆனால் பேசிக்கொள்ள மாட்டோம். நான் கோவமாக இருக்கிறேன் என்று அவருக்குத் தெரியும். அவர் கோபமாக இருக்கிறார் என்று எனக்கும் தெரியும். ஆனால் எதுவுமே நடக்காதது மாதிரி இரவு போனில் பேசிக் கொண்டிருப்போம். அவருக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றி.

இந்தக் கூட்டத்திற்கு வந்துள்ள அனைவருக்கும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லோரும் நன்றாகச் சாப்பிட்டுவிட்டு செல்லவும். மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருக்கிறீர்கள். அந்தமானிலிருந்தும் வந்திருக்கிறீர்கள். எனவே எல்லோரும் பாதுகாப்பாகச் செல்லுங்கள். நீங்கள் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்த அந்தச் செய்தி கேட்டால்தான் எனக்கு உண்மையான தூக்கம் வரும்.

### 85 இலட்சம் கையெழுத்துகள்!

‘நீட்’ தேர்வு அதை மக்கள் போராட்டமாக மாற்ற வேண்டும் என்று அந்தப் போராட்டத்தை நடத்தினோம். அந்தப் போராட்டம் மிகப் பெரிய வெற்றி. 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து என்று நம்முடைய பயணத்தை ஆரம்பித்தோம். கிட்டத்தட்ட நீங்கள் அத்தனைபேரும் சேர்ந்து மாவட்டச் செயலாளர்கள், அனைத்து கழக அணிகள் 85 இலட்சம் கையெழுத்துகளை பெற்றிருக்கிறோம். அதை மாநாட்டு மேடையில் தலைவரிடம் ஒப்படைத்தோம். விரைவில் டெல்லிக்குச் சென்று குடியரசுத் தலைவரைச் சந்தித்து அவரிடம் அதை ஒப்படைக்க இருக்கின்றேன்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் இளைஞர் அணி மாநில மாநில துணை செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, இளையராஜா, ப.அப்துல்மாலிக், பிரகாஷ், பிரபு, ராஜா, சீனிவாசன், ஆனந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, தனுஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், ஜெ.ஜெ.எபினேசர், பிரபாகர்ராஜா, புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர் சம்பத் உள்ளிட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

---

## சென்னை மாநகராட்சி

# 44வது வார்டு சபைக் கூட்டம்!

### சர்பஜெயா தாஸ் நரேந்திரன் எம்.சி. தலைமையில்!

சென்னை, ஜன 28-

ஜனவரி 25 , வாக்காளர் தினத்தை முன்னிட்டு , பெருநகர சென்னை மாநகராட்சி 44 வது வார்டில் மாநகராட்சி வரி விதிப்பு மற்றும் நிதிக் குழுத் தலைவர் சர்பஜெயா தாஸ் நரேந்திரன் தலைமையில் ஏரியா சபை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநகராட்சி , குடிநீர் வழங்கல் மற்றும் கழுவுநீர் அகற்று வாரியம் , மின்சார வாரியம் , காவல் துறை உட்பட்ட பல துறைகளை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு பொது மக்களின் கோரிக்கைகள் , மனுக்களை பெற்றனர். முன்னதாக மொழிபோர் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தி தொடங்கப்பட்ட நிகழ்வில் ஏரியா சபை உறுப்பினர்கள், மாநில பொறியாளர் அணி துணைசெயலாளர் இரா. நரேந்திரன், மாவட்ட பொருளாளர் வி.தயாளன், 44(அ ) வட்ட செயலாளர் ஆர்.எஸ்.மனோகரன், அணி நிர்வாகிகள் கோ.சதீஷ், ஷங்கர், தமிழ், பிரேம்குமார் வட்ட துணை செயலாளர்கள் சசி, ரீட்டா, கோமதி மற்றும் அலெக்ஸ் உள்ளிட்ட கழக தோழர்களும் பொது மக்களும் திரளாக கலந்து கொண்டனர் .



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புதிய பேருந்து வழித்தடத்தை மாவட்டக் கழக செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் கொடியசைத்து துவக்கி வைத்தார். கும்முடிப்பூண்டியிலிருந்து புறப்படும் பேருந்து புதுகும்முடிப்பூண்டி, சிறுபுழல்பேட்டை, பாத்தபாளையம், பில்லாகுப்பம், ஜி,ஆர்.கண்டிகை, ராஜகண்டிகை, அய்யர்கண்டிகை, கல்லூர், ஆரணி வரை 115பி வழித்தடம் இயக்கப்பட்டது. நிகழ்ச்சியில் இஏபி.சிவாஜி, கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, மு.மணிபாலன். எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், டி.கே. சந்திரசேகர், எஸ்.ராமஜெயம், இரா.அறிவழகன், சகிலா அறிவழகன், மு.பாஸ்கர், கே.வி. லோகேஷ், எம்.ஆர்.ஸ்ரீதர், எம்.முரளி, இரா.கதிரவன், செ.யுவராஜ், ராஜேஷ், யுகேந்திரன், தேவராஜன், ஜெகநாதன். பி.முத்து. ஜி.பி.வெங்கடேசன், டி.கண்ணதாசன், கு.கரிகாலன், அரவிந்த், சாண்டில்யன், ஜெயக்குமார். நிலகண்டன், சாய்சத்யன், முரளி எம்.ஜெயசந்திரன், கே.பிரபாகர் சிவராமரெட்டி, வெற்றி, மைக்கேல், பழனி, ஜெ.என்.எஸ்.பாண்டியன், போண்டாசிவா, ரமேஷ், பழக்கடை செல்வம், கருணாகரன், வெங்கடேசன், பிரகாஷ், ரவி, சிவலிங்கம், ஆனந்தன், உமாபதி, தேவதாஸ், போக்குவரத்து கழக மண்டல மேலாளர் நெடுஞ்செழியன், பொன்னேரி கிளை மேலாளர் ஜெகதீசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

---

# அரியலூரில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம்!

### அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன் பங்கேற்பு!

அரியலூர், ஜன. 28 - அரியலூரில் பேரறிஞர் அண்ணாசிலை அருகில் மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகி களுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வ. பிரபாகரன் வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகர், லதாபாலு, நகர செயலாளர் இரா.முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் இரா. கென்னடி, பூ.செல்வராஜ், வா. சௌந்தரராஜன், ரெ.அசோகசக்ரவர்த்தி, மா.அன்பழகன், வி.எழில் மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற வீர வணக்கநாள் பொதுக்கூட்டத்தில் அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன், தலைமைக் கழகப் பேச்சாளர் மதிவாணன் ஆகியோர் தமிழைக் காக்க தனது இன்னுயிரை ஈந்த மொழிப் போர் தியாகிகளின் பெருமைகளை எடுத்துக் கூறி உரையாற்றினார்கள்

இக்கூட்டத்தில் பாளை. அமரமூர்த்தி, இரா.பாலு, வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி, மு.ஞானமூர்த்தி, சுமதி அசோகசக்ரவர்த்தி, கீதா ஜெயவேல், சாந்திகலைவாணன், மொழிப் போர் தியாகிகள் வாரணவாசி கணேசன், உல்லியகுடி தங்கராசு, தெய்வ.இளையராஜா, வை. முருகானந்தம், மீனா, செல்வம், கருப்புசாமி, கலியமூர்த்தி நகர் மன்ற உறுப்பினர்கள், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ரமேஷ் நன்றி கூறினார்.

---

## தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்

# திண்டுக்கல் மண்டல அலுவலகத்தில் குடியரசு தின விழா!

மதுரை,ஜன.28-

நாட்டின் 75வது குடியரசு தினத்தினை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை லிமிடெட் திண்டுக்கல் மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் பொது மேலாளர் மா.டேனியல் சாலமன் நேற்று முன்தினம் (26.01.2024) தேசியக்கொடியினை ஏற்றி வைத்து சிறந்த பணியாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

அதனை தொடர்ந்து இயக்கத்தின்போது டீசலை சிக்கனமாக பயன்படுத்திய 15 ஓட்டுநர்களுக்கும், வருவாய் அதிகம் ஈட்டிய 15 நடத்துனர்களுக்கும், சிறந்த டயர் பராமரிப்பாக 2 பணியாளர்கள் மேலும் சிறப்பாக பணிபுரிந்த கிளை மேலாளர், உதவி பொறியாளர், டிக்கெட் பரிசோதகர், ஓட்டுனர் பயிற்சி ஆசிரியர், அலுவலக மேற்பார்வையாளர், அலுவலக பணியாளர், மற்றும் பாது காவலர் என மொத்தம் 42 என பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு பொது மேலாளர் திரு. மா.டேனியல் சாலமன் அவர்கள் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இவ்விழாவில் துணை மற்றும் உதவி மேலாளர்கள், உதவிப்பொறியாளர்கள், அலுவலக பணியாளர்கள், தொழிற்சங்கப்பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கெருகம்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டம் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு உறுப்பினர் கே.சுதாகர், கே.வசீகரன் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



ஆலத்தூர் தொகுதிக்குட்பட்ட, ஆலந்தூர் வடக்குப் பகுதி, 161வது வட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு புதிதாக அமைக்கப்பட்ட கழகக் கொடி கம்பத்தில் கழக கொடியேற்றி கல்வெட்டு பீடத்தை திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதிச் செயலாளர் பி.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் எம்.ஆர்.சீனிவாசன், கே.ஆர்.ஜெகதீஸ்வரன், வேலவன், நடராஜன், பாண்டியன் மற்றும் திலீப் ஆகியோர் உள்ளனர்.



சோழிங்கநல்லூர் ECR பிரதான சாலை, கொட்டிவாக்கம் பகுதியில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, 2028 சதுர அடியில், ரூ.62,50,000 (62 இலட்சத்து 50 ஆயிரம்) மதிப்பீட்டில், அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, "மீன் அங்காடி கட்டுமானப் பணிகளை, அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.தமிழச்சி தங்கபாண்டியன், அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில், மதியழகன், ரவிச்சந்திரன், பாலவாக்கம் விஸ்வநாதன், பாலவாக்கம் மனோகரன், வட்டச் செயலாளர் சாந்தப்பன், அரிகிருஷ்ணன், பார்த்திபன், அருண்குமார், பரிமேலழகன், கழக நிர்வாகிகள், முன்னணியினர் கலந்துகொண்டனர்.

### முடிச்சூர் ஊராட்சி முன்னாள் கழகச் செயலாளர் மு.க.மேத்யுமதனின் புதல்வர்

# முடிச்சூர் மேற்கு கிளைக் கழகச் செயலாளர் சுனில் மேத்யு திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! டி.ஆர்.பாலு எம்.பி. - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வாழ்த்து!

காஞ்சிபுரம், ஜன. 28 - கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாசியுடன், கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், முடிச்சூர் முன்னாள் ஊராட்சி கழகச் செயலாளர் மு.க.மேத்யுமதன் (நினைவில் வாழும்) மே. மேகலா ஆகியோரின் புதல்வர் முடிச்சூர் மேற்கு கிளைக் கழகச் செயலாளர் சுனில் மேத்யுவிற்கும், சென்னை, மாதவரம், (நினைவில் வாழும்) ஜெ.எஸ்.டைட்டஸ் ஆனி சௌந்தரி ஆகியோரின் புதல்வி கேரல் பிங்கிற்கும் திருமண வரவேற்பு விழா இன்று (28.1.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு, தாம்பரம், முடிச்சூர், ஆனி மெட்ரிகுலே



ஷன் பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது.

இத்திருமண வரவேற்பு விழா காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது.

புனிததோமையர்மலை வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஜி.கே. வி.விவேகானந்தன் (எ) ரவி முன்னிலை வகிக்கிறார்.

பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார், க.கந்தசாமி, அ.விநாயகமூர்த்தி, மஞ்சு ஜெயபாலன், சத்தியா சந்திரன், பி.எஸ்.ரமேஷ், கே. சுகுமார், வி.ஆர்.குமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

திருமண வரவேற்பு விழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் இம்மணவிழா வரவேற்பு விழாவில் மீ.அ.வைத்தியலிங்கம், இ.கருணாநிதி எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ, எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ, கு.செல்வபெருந்தகை எம்.எல்.ஏ, எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகர துணை மேயர் கோ.காமராஜ், த.விஸ்வநாதன், அ. தமிழ்மாறன், டி.காமராஜ், எஸ்.இந்திரன், எஸ்.சேகர், வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, எஸ்.ஆர். எல்.இதயவர்மன், ஜெ. சண்முகம், பையனூர் எஸ். சேகர், வி.எஸ்.ஆராமுதன், எம்.கே.டி.கார்த்திக், மேடவாக்கம் ப.ரவி, ஆ.நடராஜன், ஆர்.சுரேஷ், ஏ.வந்தே மாதரம், எஸ்.ஜபருல்லா, சரஸ்வதி மனோகரன், சங்கீதா பாரதிராஜன், எஸ். சதீஷ், உதயா கருணாகரன், ஆதிமாறன், கண்டோன்மென்ட் டி.பாபு, ஏ.கே.கருணாகரன், இ. எஸ்.பெர்னட், பி.பிரசாந்த், ஆர்.எஸ்.சங்கர், கோல்ட் டி.பிரகாஷ் எல். பிரபு, வி.ரவிச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### களக்காடி எல்லப்பன் தலைமையில் - எம்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ஸ்ரீதரன் முன்னிலையில்

# ஜாபர்கான்பேட்டையில் மறுசீரமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா சிலை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்துவைத்து - மாலை அணிவிக்கிறார்!

சென்னை, ஜன. 28- சைதை மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் 139-வது வட்டம் ஜாபர்கான் பேட்டை கெங்கையம்மன் கோயில் அருகில் உள்ள மறுசீரமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா சிலைக்கு பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமையில் பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் ஸ்ரீதரன் முன்னிலையில் 3.02.24 அன்று காலை 7.00 மணி அளவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து மாலை அணிவிக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் மு. மகேஷ்குமார், எம்.கிருஷ்ணமூர்த்தி, மா.அன்பரசன், எம்.ஸ்ரீதரன், சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணி, தா.மோகன்குமார், சைதை த.சம்பத், ஆர். ரமேஷ், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன், சைதை சாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், எம்.எஸ்.ஹரி பாபு, அட்கோ கமலநாதன், சை.மு. சேகர், ந. தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, ஜி.கே. ராமச்சந்திரன், டி.என்.சிவமணி, வீ.மதிவாணன், மு. கதிரவன், பொ.பரத் குமார், பி.எஸ்.முருகன், சாந்தி சுந்தரம், அ.அயாத் பாஷா, த. மணி, மு.காளியப்பன், நியூ காலனி சம்பத், வி. பி.சிவக்குமார், சைதை எல்.சந்திரன், சி.டி.காசிநாதன், து.முரளி, வி.சபரி, அ.சுப்பிரமணி, சி.ஆறுமுகம், எம்.மல்லிகா, சி.மங்கையர் திலகம், து.வினோத், க.அருண், ஜிம் க.பிரபு, பி.டி.சி. ரவி, புறா சி. ராஜா, ம. திலிப்பன், ஜெ. கதிரவன், சி.வி.பிரவின், காரைக்குடி வி.செல்வம், தொ.கொரியகுமார், ஜெ.கெவின், ஆர்.தண்டபாணி, சு.நித்தியானந்தம், ஜி.கங்காதரன், வி.ஐ.பி. ஆர்.சுரேஷ், சு.சுகுமாறன் மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர்.

எ.பாபு நன்றி கூறுகிறார். சைதை பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

### சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் நடைபெறும் பணிகள் -

# கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் - பயணிகளுக்கு கூடுதல் வசதிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம்!

சென்னை, ஜன.28- அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தில் உள்ள துறை பிரிவுகளில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் மற்றும் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் பயணிகளுக்கு செய்யப்பட்டு வரும் கூடுதல் வசதிகள் குறித்தும் அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அதன் விபரம் வருமாறு:

சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னை பெருநகர வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் நேற்று, சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி. கே.சேகர்பாபு தலைமையில் சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் பரப்புத் திட்டப் பிரிவு (APU), பரப்பு வளர்ச்சிப் பிரிவு (ADU), கட்டுமான பிரிவு (Construction Wing) ஆகிய பிரிவுகளில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும், தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடர் அறிவிப்புகள் 2023-2024ஆம் ஆண்டு அறிவித்த திட்டங்களின் தற்போதைய நிலைக் குறித்தும் மற்றும் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் பயணிகளுக்கு செய்யப்பட்டு வரும் கூடுதல் வசதிகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, எ.பாலசுப்ரமணியன், என்.ரவிக்குமார், கிளாம்பாக்கம் பேருந்து முனைய தலைமை நிர்வாக அலுவலர்/டி.ஆர்.ஓ பார்த்திபன், கண்காணிப்பு பொறியாளர் என்.சீனிவாச ராவ் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### செ.தமிழ்வேந்தன் - பெரம்பூர் ஆர்.மகேஷ் முன்னிலை! த.அன்பழகன் தலைமை!

# வியாசர்பாடியில் ஒருநாள் (வெட்ரன்) கால்பந்து போட்டி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பரிசு வழங்குகிறார்!

சென்னை, ஜன. 28 - எப்.எப்.சி. கால்பந்தாட்ட குழு 40வது ஆண்டு துவக்க விழா தமிழ்ப் புத்தாண்டு - பொங்கல் திருநாளை முன்னிட்டு எப்.எப்.சி. கால்பந்தாட்ட குழு சார்பில் ஒருநாள் (வெட்ரன்) கால்பந்து போட்டி இன்று (28.1.2024 - ஞாயிற்றுக்கிழமை) திரு.வி.க.நகர் - சென்னை கிழக்கு மாவட்டம் வியாசர் பாடி- சென்னை மாநகராட்சி நட்சத்திர விளையாட்டு திடலில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் இ.தாஸ், எம்.தனசேகர், எம்.கந்தன், பால்டேவிட் வி.லூர்து, எம்.பழனி, ஆர். பவளவண்ணன், ஜான் சுரேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

த.அன்பழகன் தலைமை வகிக்கிறார்.

திரு.வி.க. நகர் வடக்கு பகுதி செயலாளர் செ. தமிழ்வேந்தன் , பெரம்பூர் ஆர்.மகேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பரிசு வழங்குகிறார்.

இதில் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் கே. சந்துரு, முனிஸ்வர், கணேசன், க.ஜெயராமன், இரா. கருணாநிதி, ஆர்.நரேந்திரன், வள்ளூர் ரமேஷ், டி. லோகேஷ், வழக்கறிஞர் எம்.சேகர், இளம் சேகுவேரா, ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, கேபிள் டிவி தினகரன், வெ.இன்பா, நி. எழிலரசன், எஸ்.புஷ்பராஜ், மா.ருத்ரமூர்த்தி, எம். இசட்.அபோய், ஜி.கிருஷ்ணகுமார், ஜி.மாரிமுத்து, மு.க.முனிஸ்சிவா, ஆர். கே.எஸ்.எம்.தம்பைய்யா, எப்.செபாஸ்டின், வி.கே.சி. திருநாவுக்கரசு, என்.கிருஷ்ணன், மா.ஜெயகாந்தன், சு.கோபி, ஜி.சுந்தர், இ. எஸ்.ரவிச்சந்திரன், ஜெ.புரோஸ்கண்ணன், ஆர்.மாறன், பி.ஜெயசிங், ஜான்தாமஸ், ஆர்.தேவா, ஆர்.ரமேஷ், சி.மேத்யூஸ், ஆர்.பிரேம்குமார்,

எப்.எப்.சி. கால்பந்தாட்ட குழு ஐ.சி.எப். பரணி, சுந்தர், நகேஷ், இருதயநாதன், ரவி, இ.முருகன், உமாபதி, துரை முருகன், குணா, ராஜேந்திரன், மம்மு நந்தகுமார், பி. நாராயணன், எஸ்.தாமோதரன், வில்லியம்ஸ் எஸ்.சம்பத், சுதா, பன்னீர், உதயா, நெப்போலியன், பாஸ்கர், ஸ்ரீதர்,வி.ஆரோக்கியதாஸ், விஷ்ணு, முனியா, சரவணன், எம்.ஆறுமுகம், எம். சுரேஷ், சி.மவுலி, ஆர். மோத்தி, நரேஷ், ஏ.முனுசாமி

எம்.எம்.கார்டன் - ஜெ. ஹரிராஜ், கவி நிலவன், ஏ.விக்னேஷ், வி.வினல், எம்.மதன், எல்.அருண், எஸ்.ராஜ், விக்கி, எம்.பர்வீன், மனோஜ், ஏ.விக்னேஷ், பி.சுபாஷ், ஏ.அஜய், ஆசிப், ஏ.முனுசாமி, எஸ். சின்ன அப்பு, எம்.பிரசாத், எம்.நிசாந்த், கிட்டி, ஆஸ்வின், பி.அபி, பி.அஜீத், எஸ்.கார்த்தி, எம்.காமேஷ், ராகுல், சந்தோஷ், பிரவின், எம்.சக்தி, எஸ்.பாலாஜி, ஏ. ஐசக், கார்த்திக் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சியை சே.மணிமாறன், வி. கோட்டிஸ்வரன், ஜி.ரவி, வி.ஜெகன், நா.வீரமுத்து, அ.சத்யா, முகமது ரஃபி, எம்.முருகேசன், சி.ஆனந்த், ஆர். மனோஜ், த.தமிழ்முகிலன் ஆகியோர் ஒருங்கிணைக்கின்றனர்.

ஏ.பூவரசன், ச.ராஜன், என்.காமராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### குடியரசு தினத்தை முன்னிட்டு - பூந்தமல்லி ஒன்றியம்

# சென்னீர் குப்பத்தில் கிராமசபைக் கூட்டம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. குறைகளைக் கேட்டறிந்தார்!

திருவள்ளூர், ஜன.28 திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி ஒன்றியம், சென்னீர்குப்பம் முதல் நிலை ஊராட்சியில் குடியரசு தினத்தை முன்னிட்டு கிராமசபை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்துகொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டு அறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

அப்போது அவர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் ஒரு நாளைக்கு 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் உழைத்துக் கொண்டிருக்கிறார். அவர் பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவே இரவு, பகல் பாராமல் உழைத்துக் கொண்டிருக்கிறார்.

அதேபோல் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடின உழைத்து ஏற்பாடு செய்ததால் கேலோ இந்தியா விளையாட்டு போட்டி தற்போது தமிழ்நாட்டில் நடைபெறுகிறது. அதனை பிரதமர் சென்னையில் தொடங்கி வைத்தார். விளையாட்டு வீரர்கள் யார், எந்த போட்டியில் வெற்றி பெற்றாலும் அவர்களை கௌரவப்படுத்துகிற, இளைஞர்களை ஊக்கப்படுத்துகிற ஒரு அரசாக தி.மு.க. அரசு திகழ்கிறது.

மேலும் பொதுமக்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றுகிற அரசாக தமிழ்நாடு அரசு தற்போது இருப்பதால் தங்களது கோரிக்கை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

இதில் ஒன்றிய திமுக செயலாளர் ப.ச.கமலேஷ், ஒன்றிய குழு தலைவர் பூவை எம்.ஜெயக்குமார், ஒன்றிய குழு துணைத் தலைவர் பரமேஸ்வரி கந்தன், மாவட்ட கவுன்சிலர் ஏ.ஜி.ரவி, ஊராட்சி மன்ற தலைவர் கோட்டிஸ்வரி அன்பு ஒன்றிய கவுன்சிலர்கள் கன்னியப்பன், டில்லி குமார், ஊராட்சி துணைத் தலைவர் கோவிந்தராஜ் சுகாதாரத்துறை துணை இயக்குனர் (பொறுப்பு) க.பழனி வட்டார வளர்ச்சி அலுவலர் ஞானதிரவியம், வட்டார மருத்துவ அலுவலர் பிரதிபா, திமுக நிர்வாகிகள் வி.குமார் டி.அண்ணாமலை, ஏ.ஜனார்த்தனன், இளையான், ஏ.ஆர். பாஸ்கர், புகழேந்தி, பிரபாகரன், பிரகாஷ், குமரேசன், விமல் ஆனந்த், சண்முகம், கே.ஜி.ஆர்.ஸ்டாலின், சென்னீர்குப்பம் எல்.வெங்கடேசன், சேகர், வார்டு உறுப்பினர்கள் வெற்றிவேல், மாரி, ஆர்த்தி பிரபுராஜ், கீதா இளங்கோவன், பத்மாவதி நாராயணன், சந்திரா சுப்பிரமணி, சுகன், ஹேமாவதி சுந்தர், துர்கா தேவி மூர்த்தி, செல்வராஜ், அசோக்குமார், வட்டார ஒருங்கிணைப்பாளர் சிவானந்தம், ஊராட்சி செயலர் சுகுணா மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட பூவிருந்தவல்லி நகராட்சி பேரறிஞர் அண்ணா அரசு பள்ளியில் குடியரசு தின விழாவை முன்னிட்டு பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தேசியக்கொடியை ஏற்றி பள்ளி மாணவ -மாணவிகள் ஆசிரியர்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் பூவிருந்தவல்லி நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், நகர் மன்ற துணைத் தலைவர் ஸ்ரீதர், தலைமை ஆசிரியர் கிறிஸ்டோபர் உள்பட கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் பள்ளி ஆசிரியர்கள், மாணவ-மாணவிகள் உள்ளனர்.

### குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் - ஊராட்சி வாரியாக

# பாக முகவர்கள் - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## படப்பை ஆ.மனோகரன் தலைமை! வே.உமாகாந்த் முன்னிலை!

காஞ்சிபுரம், ஜன. 28 - குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் ஊராட்சி வாரியாக (BLA2) பாக முகவர்கள் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகளுடன் நாடாளுமன்றத் தேர்தல் பணி குறித்து ஆய்வு கூட்டம் ஒன்றிய செயலாளர் படப்பை.ஆ. மனோகரன், தலைமையில், திருபெருமந்தூர் (தனி) தொகுதி தேர்தல் பொறுப்பாளர் வே.உமாகாந்த் முன்னிலையில் நடைபெற்றது.

குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் 32 ஊராட்சிகளை சேர்ந்த 162 பாக முகவர்கள் மற்றும் உறுப்பினர்கள், கிளை செயலாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளிடம் மாவட்ட கழகத்தால் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு வழங்கப்பட்ட வாக்காளர் குடும்ப விபரம் சேகரித்தல் (O.M.R.படிவம்) பணி குறித்து கீழ்க்கண்ட 8 பகுதிகளில் ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் வே. உமாகாந்த் முன்னிலையில் கீழ்குறிப்பிட்டுள்ள சமுதாய கூடம் - நந்தம்பாக்கம், திருமுருகா திருமண மண்டபம்- சிக்கராயபுரம், தலைவர் மு.செல்வமணி இல்லம் - வரதராஜபுரம், மீனாட்சி திருமணமண்டபம் - சோமங்கலம், சி.என்.சி திருமண மண்டபம் - படப்பை, லட்சுமி நாராயணா திருமண மண்டபம் - மாடம்பாக்கம், ஒன்றிய பொருளாளர் சி. பார்த்தசாரதி இல்லம் - ஆரம்பாக்கம், பெருமாள் கோயில் வளாகம் - சென்னகுப்பம் ஆகிய இடங்களில் ஆய்வு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வாசுகி மகேஷ், சி.பார்த்தசாரதி, எம்.பரிமேலழகன்..வி அரி, மு.ராஜேந்திரன், பொன்ரமேஷ் கவி, சி.பாலகிருஷ்ணன், சங்கீதா வேலு, எஸ்.வைரம், என். எஸ்.இளங்கோ, கு.ஏழுமலை, க.ஏழுமலை, தினேஷ் கந்தசாமி , வி. எஸ்.கோதண்டராமன், ப.அறிவொளி, ரா.தீபக், க.பா.ஆடலரசு, மா. செ.பிரகாஷ் லோ.சுதாகர், அ.ஜமீர் இரா. குமரவேல், செ.பார்த்திபன், ஆர். சையத்ரமிஸ், இ.பாலாஜி, ப.வேல்முருகன், ஜி.இருசப்பன். எ.இ.பஞ்சாட்சரம் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், (BLA 2) பாக முகவர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், கழகத் தோழர் எஸ்.தினகரன் - டி.ஆசியா இணையரின் குழந்தை டி.தீஷனின் முதல் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்தினார். இதில் எஸ். ஜெகன், எழும்பூர் தெற்குப் பகுதிக் கழக முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், ஆர் .தமிழரசன், எஸ்.விமல், ஸ்டீபன் ராஜ், டி.சரண்ராஜ், எஸ்.தினகரன், எஸ்.ரூபன் மற்றும் உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்ற நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.






நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கோவை மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். உடன் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர்கள் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டக் கழக செயலாளர்கள் கோவை கார்த்திக், தொண்டாமுத்தூர் அ.ரவி, தளபதி முருகேசன், மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



சென்னை கிழக்கு மாவட்ட வர்த்தக அணி தலைவர் ஆர்.மாரி , துறைமுகம் மேற்கு பகுதி 57வது வட்ட பகுதி பிரதிநிதி எம்.சரவணன் ஆகியோர் இல்லத் திருமணத்தில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் – இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு மணமக்கள் ஆர்.பார்த்திபன் – எஸ்.சந்தியா ஆகியோரை வாழ்த்தினார். இதில் மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மண்டல குழு தலைவர், மாமன்ற உறுப்பினர்கள், வட்டச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி துணைச் செயலாளர், பகுதி அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், வட்ட அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்

# தொழில் முனைவோருக்கான கண்காட்சி - கருத்தரங்க நிறைவு விழா!

## தொழிலதிபர்களுக்கு அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நினைவுப்பரிசு வழங்கினார்!

சென்னை, ஜன.28

சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தை (TN BEAT EXPO2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 26.01.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்ட நிகழ்ச்சியின் நிறைவு விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் கலந்துகொண்டார்.

சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தை (TN BEAT EXPO2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 26.01.2024 அன்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின் நிறைவு விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் கலந்துகொண்டு கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தில் கலந்துகொண்ட தொழில் அதிபர்கள், தொழில்முனைவோர் முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள், வணிகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறை சார்பாக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) தென்னிந்திய வரலாற்றில் முதல் முறையாக தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தினை (TN BEAT EXPO 2024) சென்னை வர்த்தக மையத்தில் 26.01.2024 மற்றும் 27.01.2024 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெற்றது.

இக்கண்காட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரால் தயாரிக்கப்பட்ட 8,000-க்கும் மேற்பட்ட பொருட்களை 420 அரங்குகளில், காட்சிப்படுத்தப்பட்டு 25,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.

மேலும், இரண்டு நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சியில் குறு, சிறு தொழிலாளர்கள் சுயஉதவி தொழில் செய்பவர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் தங்களது உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்தியதில் நற்பயனைப் பெற்றதாக தெரிவித்தனர்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழக தலைவர் உ. மதிவாணன் அவர்கள், தொழில்துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி. க. லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் அண்ணாதுரை மற்றும் தொழில் முதலீட்டாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

பேரூர்க் கழகச் செயலாளர் தங்கவேல் தலைமையில்

# கூத்தைப்பார் பேரூர்க் கழகம் சார்பில் மாவட்ட அளவிலான கூடைபந்துப் போட்டிகள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி - தாயகம் கவி எம்.எல்.ஏ. - கே.என்.சேகரன் பங்கேற்பு!

திருச்சி, ஜன.28-

முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கூத்தைப்பார் பேரூர்க் கழகம் சார்பாக மாவட்ட அளவிலான ஆண்கள், பெண்கள் பங்கு பெறும் கூடைப்பந்து போட்டிகள் இன்று 28-01-2024 காலை 10 மணியளவில் பி.எச்.இ.எல். மனமகிழ் மன்றத்தில் நடைபெறுகிறது.

வரவேற்புரை : கூத்தைப்பார் பேரூராட்சி தலைவர் கே.கே.செல்வராஜ்,

தலைமை : கூத்தைப்பார் பேரூர்க் கழக செயலாளர் எம்.ஆர்.டி.பி.கே. தங்கவேல்

ஆர்.பழனியாண்டி, தங்கையன், பெ.விருத்தாச்சலம், கே.எம்.பி.செல்வராஜ், எஸ்.மல்லிகா, ஆர்.அர்ச்சுனன், எஸ்.மாமுண்டி, கே. ஆர்.ராமசாமி, ஜி.சௌந்தர்ராஜன், எம்.கனகவேல், எஸ்.வெற்றிச்செல்வி, ஆர். மாலதி, பி.சக்திவேல், அ. முருகேஸ்வரி, வி.ஜீவா, ஏ.ரஞ்சித்குமார், ஆர். சுமித்ரா, சுமதி இளங்கோ, அங்காள ஈஸ்வரி, ஆர். ராஜேந்திரன், கே.ராஜசேகர், வி.கலையரசன், பொ. பூபாலன், ஆர்.விக்னேஸ்வரன், ஆர்.இளங்கோ, சி. தெய்வீஸ்வரன், சிதுரைமுருகன் , மு.பூபதி, கே.தேவராயன், எம்.சக்திவேல், ஜி.விஜயக்குமார், இ.பி. பாலு, டி. நடராஜன், வி. எஸ்.வேலுச்சாமி, எம்.மாரிமுத்து, கஸ்டம்ஸ் சேகர், எம்.நாகராஜ், நீல.தங்கராசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சிறப்பு அழைப்பாளர்கள் : அன்பில் மகேஷ் பொய்யாமொழி,

(தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர்), வழக்கறிஞர். ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. (கழக துணை அமைப்புச்செயலாளர்),

கே.என்.சேகரன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர்) உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

மேலும் கே.எஸ்.எம்.கருணாநிதி (திருவெறும்பூர் வடக்கு ஒன்றியச் செயலாளர், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத்தலைவர்), மு.மதிவாணன், மயில் கே.எம். பெரியசாமி, வண்ணை அரங்கநாதன், பி.எம்.சபியுல்லா, கவிஞர் சல்மா, ந.செந்தில்எம்சி, ந. கோவிந்தராஜ், அ.த.த.செங்குட்டுவன், ரா.மூக்கன், வ.லீலாவேலு, இரா.குணசேகரன், கோ.சத்யா, கோவிந்தராஜ், எஸ்.சிவக்குமார், இ.காயாம்பு, புலவர் ந.ப.மா.மனோகரன், சி.கங்காதரன், வி.தனசேகரன், இரா.கணேஷ்குமார், ஜே. கார்த்திக், நவல்பட்டு சண்முகம், ஒன்றிய செயலார்கள், ஒன்றிய சேர்மன்கள், பேரூர்க் கழகச் செயலாளர்கள் : சி.செல்வராஜ், சி.ராமசாமி, எம்.பழனியாண்டி, சி.சின்னஅடைக் கன், ஆர். ஸ்ரீரங்கன், வி.ஏ. ராஜேந்திரன், மு.ம. செல்வம், கே.ஏ. நாகராஜ், வையம்பட்டி என்.குணசீலன், மணப்பாறை ஆர்.அமிர்தவள்ளி, என்.சரண்யா, கீதா, அ.மைக்கேல்ராஜ், ஒன்றிய கழக நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள், வார்டு நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நன்றியுரை : மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.அசோக்குமார், கே.டி.முருகேசன்


## கோயம்புத்தூர் மாநகராட்சி

பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)6/2024 நாள் : 27.01.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
| --- | --- | --- | --- | --- |
| 1 | மேற்கு, வடக்கு, தெற்கு மற்றும் மத்திய மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் தார்ஒட்டு போடுதல் | 86 பணி | 13.02.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 14.02.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 047/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 27.01.2024




திருவொற்றியூர் ஜெயகோபால் கரோடியா அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நாட்டின் 75–ஆம் ஆண்டு குடியரசு தின விழா நிகழ்ச்சியில் மாநில மீனவர் அணி துணைத்தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சியை கண்டுகளித்து, மாநில அளவில் நடைபெற்ற கலைத்திருவிழாவில் கலந்து கொண்டு களி மண் சிற்ப பிரிவில் முதலிடம் பிடித்த மாணவன் ராகுல், சிலம்பப் போட்டியில் மாவட்ட அளவில் தங்கப்பதக்கம் வென்றுள்ள ஸ்ரீகா, ஜனார்த்தனன் ஆகியோரை வாழ்த்தி சிறப்பு பரிசு வழங்கினார். இதில் தலைமை ஆசிரியர் வெற்றிச்செல்வி, வி.ராமநாதன், கே.பி.சொக்கலிங்கம் எம்.சி. மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த

# ஜனநாயக அமைப்புகளில் மாண்பு - நல்லொழுக்கம் பேண வேண்டியது அவசியம்!

## மும்பையில் நடைபெற்ற பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் மு.அப்பாவு பேச்சு!



**மும்பை, ஜன.28-**

**பேரவைத் தலைவர் மு.அப்பாவு நேற்று (27.1.2024) மும்பையில் நடைபெற்ற பேரவைத் தலைவர்கள் மாநாட்டில், ஜனநாயக அமைப்புகளின் மீது மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த நாடாளுமன்றம், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சட்டமன்றங்கள் ஆகியவற்றில் மாண்பு மற்றும் நல்லொழுக்கம் பேண வேண்டியதன் அவசியம் குறித்து உரையாற்றினார்.**

மாநாட்டில் அவர் பேசியதாவது:-

இப்போது இந்தியாவில் இருக்கின்ற ஜனநாயக முறைக்கு முதல் தொடக்கப்புள்ளி சோழர் ஆட்சிக் கால குடவோலை முறையாகும். இதற்குச் சான்றாக, தமிழ்நாட்டில், காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் கல்வெட்டை குறிப்பிட்டுச் சொல்லலாம். பத்து தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டு, கிராம சபை தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவ்வாறு, குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சபை தலைவர்களை அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில் நீக்கும் அதிகாரமும் அதில் குறிப்பிடப்பிட்டிருந்தது. அதனுடைய தொடர்ச்சிதான் இந்திய ஜனநாயகம்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களுக்கு மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை கொண்ட அமைப்புதான் குடியாட்சி முறை இந்திய ஜனநாயகம் ஆகும். கூட்டாட்சி முறை அமைப்பைக் கொண்டதுதான் நம்முடைய ஜனநாயக அமைப்பு. இந்திய ஜனநாயகத்தின் நான்கு தூண்கள் என்பவை, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்கள், நிர்வாகத் துறை, நீதித் துறை மற்றும் பத்திரிகைத் துறை ஆகியவை ஆகும். இந்த நான்கு தூண்களும் வெவ்வேறு அமைப்புகளாக இருந்தாலும், இணைந்து செயல்பட்டால்தான் மக்களுக்கு நன்மைகள் ஏற்படும். குறிப்பாக, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மக்களுடைய பிரச்சினைகள் குறித்து கொண்டு வரப்படுகின்ற தீர்மானங்கள், விவாதிக்கப்பட்டு, சட்டமாக்கி சரியான முறையில் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை நீதித் துறை கண்காணிக்கிறது. நிர்வாகத் துறை சரியாக செயல்படுகின்றதா என்பதை பத்திரிக்கைத் துறை கண்காணிக்கிறது.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் கொண்டுவரப்படும் மசோத்தாக்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் பிரதிநிதிகளால் முழுமையாக விவாதிக்க அனுமதிப்பதுதான் ஜனநாயகத்தின் மாண்பு ஆகும். மேலும், வினாக்கள் விடைகள் நேரம், நேரமில்லா நேரத்தில் உறுப்பினர்களை முழுமையாக பேச அனுமதிக்க வேண்டும்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களின் மாண்பைக் கெடுக்கும் வகையில் சில நேரங்களில் சில மக்கள் பிரதிநிதிகளின் நடவடிக்கைகள் இருக்கும்போது பேரவைத் தலைவர்கள் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் ஆனந்த் வெங்கடேஷ் அவர்கள், "*I will refer to IPC only as IPC even after it gets replaced with new law named in Hindi*" என்று குறிப்பிட்டுள்ளார்.

2006-2011 ஆண்டு தமிழ்நாட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த காலக் கட்டத்தின்போது, சட்டன்றத்தின் நடந்த நிகழ்வு ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்தவர் ஓ.பன்னீர் செல்வம் அவர்கள். அவையில் நடந்த ஒரு நிகழ்வுக்காக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் அவையிலிருந்து பேரவைத் தலைவர் அவர்கள் வெளியேற்றி விடுவார். அவைக்கு வருகை தந்தவுடன் அதனை அறிந்த தலைவர் கலைஞர் அவர்கள், அவர்கள் அனைவரையும் மீண்டும் அவைக்கு அழைத்து வருமாறு தற்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் தெரிவித்து, மீண்டும் அவர்களை அவைக்கு அழைத்து வந்து அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளச் செய்தவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள். இதுதான் ஜனநாயக மாண்பு.

### எதிர்க்கட்சிகளுக்கு பேச கூடுதல் நேரம் அனுமதி!

தமிழ்நாட்டில் தற்போது, 132 ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 101 பேரும் உள்ளனர். கடந்த இரண்டரை ஆண்டுகளில், எதிர்க்கட்சி உறுப்பிர்களுக்கு 107 மணி நேரம் பேசுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு 78 மணி நேரம்தான் பேச அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய கருத்துகள் அவையில் அதிகளவில் பதிவு செய்யப்பட வேண்டுமென்பதுதான் முதலமைச்சர் அவர்களின் எண்ணமாகும்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளால் நிறைவேற்றப்படுகின்ற சட்ட முன்வடிவுகள் அனைத்திற்கும் மேதகு குடியரசு தலைவர் அவர்கள் ஓரிரு நாட்களில் அனுமதி அளித்து விடுகிறார். ஆனால், பல மாநிலங்களில் ஆளுநர்களால் பல சட்டமுன்வடிவுகள் பல மாதங்களாக, பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டு, உச்சநீதிமன்றம் வரை பல மாநில அரசுகள் சென்றுள்ளன. இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான், நான், சிம்லாவில் நடைபெற்ற பேரவைத் தலைவர் மாநாட்டில், "ஆளுநர்கள், சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்குவதற்கு கால அவகாசம் முறையாக நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினேன்". அதையே தற்போதும், நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

### சட்டமன்ற மாண்பை இழிவுப்படுத்திய ஆளுநர்

அதோடு, கடந்த ஆண்டு தொடக்கத்தில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையை ஆற்ற வந்த ஆளுநர் அவர்கள், ஆளுநர் உரையில் பல பகுதிகளைச் சேர்த்தும், நீக்கியும் வாசித்து தமிழக சட்டமன்ற மாண்பை இழிவுப்படுத்தியை நினைவு கூர விரும்புகிறேன்.

தற்போது, கேரள மாநிலத்தினுடைய ஆளுநர் அவர்கள், ஆளுநர் உரையின் கடைசிப் பக்கத்தை மட்டும் அவையில் வாசித்து, ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்கியதை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

ஜனநாயக மாண்பை, ஜனநாயக முறையில், நாட்டு மக்களும், ஆளும் கட்சிகளும் பின்பற்றினால் தான் நம்முடைய நாட்டிற்கு பெருமை சேர்க்க முடியும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிலவு பூ. கணேசனின் மூத்த மருமகன்

# கடலூர் மருத்துவர் வெ.நமச்சிவாயம் மறைவு!

## கழக நிர்வாகிகள் அஞ்சலி!



கடலூர், ஜன.28

சிதம்பரம் ரிஜிஸ்ட்ரார் சு.பூவராகன் அவர்களின் பேத்தி பூங்கொடியின் கணவரும், நிலவு பூ. கணேசனின் மூத்த மருமகனுமான கடலூர் குழந்தைகள் மருத்துவ நிபுணர் வெ.நமச்சிவாயம் (வயது 81) அவர்கள் நேற்று (27.01.2024) பிற்பகல் 3.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சுயமரியாதை இயக்கக் குடும்பத்தில், நிலவு. பூ. கணேசனின் மூத்த மகள் பூங்கொடி- மருத்துவர் வெ.நமச்சிவாயம் இணையரின் திருமணம் நாவலர் தலைமையில் கடலூரில் நடைபெற்றது.

கடலூர் மாநகரில் குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவராகத் திகழ்ந்து மிகவும் பிரபலமானவர். சேவை மனப்பான்மையுடனும், பகுத்தறிவுக் கொள்கையுடனும், முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர், ஆசிரியர் கி.வீரமணி மற்றும் திராவிட இயக்கத் தலைவர்களுடன் கொள்கை வழி உறவினராகத் திகழ்ந்தவர் மருத்துவர் வெ.நமச்சிவாயம் ஆவார்.

இவருக்கு மருத்துவர் ந.பூங்குழலி கோபிநாத் என்ற மகளும், மருத்துவர் ந.பூங்குன்றம் என்ற மகளும் உள்ளனர்.

செய்தியறிந்து கழக நிர்வாகிகளும், திராவிட இயக்கச் சிந்தனையாளர்களும், பொதுமக்களும் திரளாகச் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.


அவரது இறுதி ஊர்வலம் நாளை (திங்கள்கிழமை) காலை 10 மணியளவில் ரங்கநாதன் நகர் கடற்கரைச் சாலை, கடலூர் எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.



உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத் பேரூராட்சியில் தூய்மை பணியாளர்கள் தினத்தை முன்னிட்டு விதைகள் தன்னார்வ அமைப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் இணைந்து ஏற்பாட்டில் தொடர் மழையில் தூய்மை பணியாளர்கள் பணியை சிறப்பாக செய்தமைக்கு அவர்களை கௌரவித்து நினைவு பரிசை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் பி.சேகர், பேரூர் செயலாளர் என்.பாண்டியன், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி டபிள்யு.இ.எஸ்.இல்லா மல்லி ஸ்ரீதர், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கே.தியாகராஜன், செயல் அலுவலர் ச.லோகநாதன், அரிமா சங்க நிர்வாகிகள் ஆர்.வெங்கடேசன், இ.பழனி, . எல்,சசிகுமார், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் wes.சுகுமாரன், பசுமை சரண் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சேலம் : நம்பிக்கையின் உதயம்!



















**அது ஜனநாயகப் போர்க் களத்துக்கு இளைஞர்களைத் தயார் செய்யும் பாசறையா?**

**அறிவுச் சான்றோர் கூடி நடத்திய பல்கலைக் கழகக் கருத்துப் போரா?**

**இந்தியாக் கூட்டணியின் வெற்றி விழாவா? -**

இந்த மூன்று கேள்விகளுக்கும் இன்னும் பதிலை எட்ட முடியவில்லை. இந்த மூன்றையும் மொத்தமாகச் சேர்த்து நடத்திக் காட்டிவிட்டார் எழுச்சிமிகு உதயம், மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்கள்.

ஏசியவர்கள் - ஏளனமாகப் பார்த்தவர்கள் - எள்ளி நகையாடியவர்கள் - எரிச்சல் அடைந்தவர்கள் - எகத்தாளம் போட்டவர்கள் - அத்தனை பேரையும் மொத்தமாக 'ஏமாற்றிவிட்டார்' மாண்புமிகு உதயநிதி அவர்கள்.

'வாரிசு' என்பதால் அழைத்து வரப்படுவதாகவும் - 'வாரிசு' என்பதால் வசைக்கு ஆளானார். ஆனால் கொள்கை விசையைச் சிக்கெனப் பிடித்து இளையோர் அனைவரையும் தன்வசப்படுத்தி - எதிர்கால ஏற்றத்துக்கு பாதை அமைத்துத் தரும் சாரதியாக உயர்ந்துவிட்டார் உதயநிதி. இனி அவர்களால் அவரை விமர்சிக்க முடியாது. அவரது கொள்கையை வேண்டுமானால் விமர்சிக்கப் பழகலாம்.

சேலம் இளைஞரணி மாநாடு இந்த நாட்டுக்குச் சொல்லும் செய்தி ஒன்றுதான்: " தமிழ்நாட்டின் காப்பரண் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் - தமிழ்நாட்டுக்கும் இன்னொரு அரை நூற்றாண்டு காலத்துக்கு காவல் தளபதிகள் தயாராகி விட்டார்கள்" என்பதுதான்!

திரும்பிய பக்கமெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்கள் பட்டாளம். 'இந்தப் படை போதுமா?' என்பது வழக்கமாக கேட்கும் வாழ்த்து மொழி. ' இந்தப் படை போதும்' என்பதே சேலம் சொல்லிய சைகை மொழி.

வேட்டிகளை எண்ணி விடலாம். மொத்தமும் பேண்ட், ஜீன்ஸ், டீ சர்ட்டுகள் தான். பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் வரும் என்பதால் மாநாட்டுப் பந்தலுக்கும் வாகனங்கள் நிறுத்தும் இடத்துக்கும் இரண்டு, மூன்று கிலோ மீட்டர் தூரம் இருந்தது. அங்கே வாகனங்களை நிறுத்திவிட்டு, ஊர் வாரியாக - ஊர்வலமாகவே முழக்கமிட்டு வந்தார்கள் இளைஞர்கள். பொதுவாக மாநாடுகளில் ஊர்வலங்கள், பேரணிகள் நடத்தி பல ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனாலும் என்ன? அறிவிக்கப்பட்டாத பேரணியை இளைஞரணியினரே நடத்தினார்கள்.

**தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்தக் காலத்தில் மொத்தமாக நடத்திக் காட்டிய பேரணிப் போர்ப்பரணியை, இப்போது தனித்தனியாக நடத்திக் காட்டி விட்டார்கள் இளைஞரணியினர்.**

மாநாடு தலைகளால் நிரம்பி இருந்தது. மாநாட்டுப் பந்தலுக்குள் நிரப்ப முடியாத தலைகள் லட்சக்கணக்கில் பந்தலுக்கு வெளியே இருந்தது. சேலம் - ஆத்தூர் சாலையின் இருபக்கமும் இருந்தது. இருவண்ணக் கொடி காக்கும் போர்ப் படை வீரர்கள், எல்லாப் பக்கமும் இருந்தார்கள்.

அந்தப் பக்கம் சேலத்தில் இருந்து வந்தாலும் - இந்தப் பக்கம் கள்ளக்குறிச்சியில் இருந்து வந்தாலும் எல்லாப் பக்கமும் திமுக பக்கமாக இருந்தது. அவர்கள் அனைவரது உடையிலும் நடையிலும் குரலிலும் இருந்த எடுப்பும், மிடுக்கும் மூத்த முன்னோடிகளை வியப்பில் ஆழ்த்தியது. எதிரணியினரை விம்ம வைத்தது.

" இனி இந்த இயக்கத்தை எந்தக் கொம்பனாலும் தொட்டுக் கூட பார்க்க முடியாது" என்று சொன்னார் தலைவர் என்றால், அது சும்மா அல்ல. 'அப்படிச் சொல்லும் வாய்ப்பை வழங்கினார் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி' என்று தலைவர் சொன்னதும் வாய் வார்த்தை அல்ல.

**தானாய் கூட்டம் சேர்வது எவ்வளவு சிரமம் என்பது தலைவருக்குத் தெரியும். 1980களின் மத்தியில் இருந்து தமிழ்நாட்டு ஊர் ஊராகக் கிராமம் கிராமமாக, நகர் நகராக, தெருத் தெருவாக வலம் வந்தவர் அவர். காரை அவரே ஓட்டி, கழகத்தை ஓட்டியுயர்த்திக் காட்டியவர் அவர். துளித்துளியாய் இளைய சக்தியைச் சேர்த்தவர் அவர். நாற்பதாண்டு கால கழகத்தின் வெற்றிக்கும், தோல்விகளுக்குப் பின்னால் வீழ்ந்து போகாமல் இருப்பதற்கும் காரணம், அந்தக் காலத்தில் அவர் திரட்டிக் கொடுத்த இளைஞர்கள் தான் காரணம்.**

இப்போது மீண்டும் இளைஞர்கள் தேவை. இளைய ரத்தம் தேவை. போர்க்களங்கள் அதிகமாகி வருவதால் போர் வீரர்களும் அதிகம் தேவை. சமூக வலைத் தளங்களின் தாக்கம் காரணமாக, அறிவுப் பருவம் அடையும் வயது இப்போது குறைந்து விட்டது. எனவே, அவர்களை வளர்த்தெடுத்தாக வேண்டிய தேவை இருக்கிறது. இந்த நிலையில் தான் உதயநிதி உதயமானார்.

2019 ஆம் ஆண்டு இளைஞரணிச் செயலாளராக அறிவிக்கப்பட்டது முதல் தலைவரைப் போலவே, ஓய்வில்லாத உழைப்பை வழங்கத் தொடங்கினார். மூத்த முன்னோடிகள் அனைவரையும் பார்த்து பொற்கிழி கொடுத்து வணங்கி நின்றார். இளைய தம்பிமார்கள் அனைவருக்கும் பயிற்சி பாசறைக் கூட்டங்கள் நடத்தி வழிகாட்டிக் கொண்டிருந்தார். மூத்தோரை மதித்தலும் - இளையோர் மதியை பெருக்குதலுமே தலைமைக்கான இலக்கணங்கள். இரண்டையும் கனசுத்தமாகச் செய்தார் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி அவர்கள்.

இந்த மொத்தக் கூட்டத்தையும் ஒரு முகப்படுத்த ஒரு வாய்ப்பை வழங்கினார் தலைவர் அவர்கள். சேலத்தில் மாநாடு அறிவிக்கப்பட்டது. சேலம் மாநாட்டுக்காக மாவட்டம் தோறும் இளைஞரணிச் செயலாளர் கூட்டங்கள் நடத்தினார். அதுவே மினி மாநாடுகளாக அமைந்திருந்தன. முப்பது மாவட்ட மாநாடுகளை நடத்திக் காட்டி விட்டுத்தான் முழு மாநாடாக சேலத்தைக் குறித்தார்கள். சேலம் முழுமையான மாநாடாக அமைந்து விட்டது.

ப.திருமாவேலன்

ஒரு மாநாடு எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு இலக்கணக்கனமாக அமைந்து விட்டது சேலம். மாநாட்டுகள் நடத்தியே 'டாக்டர்' பட்டம் வாங்கியவர் கழகத்தின் முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள். சேலத்துக்கு பொறுப்பாளர் என்பதால் மட்டுமல்ல, மாநாடுகளுக்கே பொறுப்பாளர் அவர். அதனையும் மெய்ப்பிக்கும் களமாக அமைந்துவிட்டது.

**இது வரை இத்தனை பெரிய பந்தல் போட்டது இல்லை. இதுவரை ஆறுலட்சத்துக்கும் அதிகமான இவ்வளவு பெரிய இளைஞர் கூட்டம் ஒரே இடத்தில் திரண்டது இல்லை. இதுவரை இரும்புக்குதிரையாம் புல்லட் வாகனத்தில் இத்தனை ஆயிரம் பேர் அணிவகுத்து வந்தது இல்லை. இதுவரை ஆயிரத்துக்கும் மேலான ட்ரோன் கேமராக்கள் ஒரே இடத்தில் வட்டமடித்தது இல்லை. ட்ரோன் காட்சிகளில் பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் வந்ததும் இல்லை. கோடிக்கணக்கான தமிழ் மக்களின் இதயத்தில் வீற்றிருக்கும் அன்புமிகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வானத்தில் வட்டமிடும் உருவத்தில் மின்னிய போது எழுந்தது கைதட்டல். பின்னர் விசில்.**

5 ஆயிரம் புகைப்படங்கள் கொண்ட மாபெரும் கண்காட்சி வரலாற்றை நம் கண் முன் விரித்திருந்தார் கோவை சுப்பு!

மாநாட்டு திடல்களில் ஆங்காங்கே புத்தக விற்பனை நடக்கும். தரையில் பரப்பி வைத்திருப்பார்கள். புத்தகக் கண்காட்சியாகவே இதுவரை அமைத்தது இல்லை. காலையில் தொடங்கி மாலையில் வரை - தலைப்புகளில் பேசியவர்கள் அனைவரும் கொள்கை முழக்கம் இட்டார்கள். 'திமுக மேடைகள், மாலை நேரத்துக் கல்லூரிகள்' என்ற பேரறிஞர் அண்ணாவின் கனவுக்கு வலுச்சேர்த்தன இவ்வுரைகள். தேர்தல் அரசியலில் இறங்கி, ஆட்சியில் இருக்கும் எந்தக் கட்சியாவது இத்தகைய தத்துவார்த்த உரைவீச்சுகளுக்கு மேடையைக் கொடுத்திருக்குமா? கொடுத்திருக்காது. இத்தகைய அறிவுக்குரிய தீர்மானங்களைப் போட்டிருப்பார்களா? மாட்டார்கள். இவை அனைத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தான் நடக்கும்.

ஏனென்றால் தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - தமிழினத் தலைவர் கலைஞர் - மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் - இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி என்ற தலைமுறை நீட்சி என்பது தத்துவத்தின் நீட்சியாக அமைந்திருக்கிறது. அதனால் தான் மாநாடுகள் கூட பாசறைகளாக அமைகின்றன. பல்கலைக் கழகங்களாகத் தெரிகின்றன.

சேலம் நோக்கி வந்த தீரர்கள் அனைவர்க்கும், பாசிச பா.ஜ.க.வை வீழ்த்தும் கடமைக் களப்பணியைத் தந்துள்ளார் தலைவர். இத்தனை லட்சம் பேர் கொள்கை உரத்தோடு பாசிசத்துக்கு எதிராக மூச்சுப் பரப்புரையைச் செய்தாலே பாசிசம் வீழும். எனவே, சேலம் கர்ஜனைகள், நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியையும் உறுதி செய்துள்ளது. பொதுவாக தேர்தல் காலங்களில் தேர்தல் சிறப்பு மாநாடு நடத்துவது வழக்கம். இளைஞரணி மாநாடே தேர்தல் சிறப்பு மாநாடாக அமைந்துவிட்டது.

**வெற்றிக்குப் பிறகு நடைபெற வேண்டிய வெற்றி விழா மாநாட்டையும் சேர்த்து நடத்திக் காட்டிவிட்டார் இளைஞரணிச் செயலாளர் அவர்கள். பெரிதினும் பெரிது செய்யும் பெரும்படை அவர் கையில் இருக்கிறது. சிறிதினும் சிறிது கீழ்மை செய்யும் கூட்டத்தின் ஆட்டத்தை முடிக்க வேண்டிய கடமையும் அவர் கையில் இருக்கிறது.**

# கலைஞரும் நானும் 55

**“நேரம் தவறாமை, வாக்குறுதி கொடுத்தால் அதை நிறைவேற்றுவது, எதிர்பாராத நேரத்தில் மகிழ்ச்சி அளிப்பது, கோபம் வந்தால் கடுமை, அதே நேரத்தில் அடுத்த சில நிமிடங்களில் அமைதியும், இயல்பும் என கலைஞரின் குணம் குழந்தைக்கு நிகரானது” என முத்தமிழறிஞர் கலைஞருடனான தனது நினைவுகளைப் பகிர்கிறார் இயக்குநர் சி.பி.கோலப்பன்.**

■ சி.பி.கோலப்பன்,
இயக்குநர்



## “அவர் ‘கிளாப்’ அடித்துத் தொடங்கி வைத்த வாழ்க்கை இது!”

“இயக்குநர் இராம.நாராயணன் அவர்களிடம் இணை இயக்குநராக ஐம்பதுக்கும் மேற்பட்ட படங்களுக்குப் பணியாற்றினாலும், கலைஞர் வசனம் எழுதிய படத்தின் மூலம் இயக்குநர் ஆனேன் என்பது, எனக்கு வாழ்நாள் மகிழ்ச்சி அளிக்கக் கூடியது. தவிர, அந்த வாய்ப்புகள் காரணமாக கலைஞர் அவர்களை அடிக்கடி சந்திக்கவும், இயல்பாக உரையாடவும் கிடைத்த வாய்ப்பும் என் வாழ்க்கையின் அதிசயம் என்பேன்.

**‘கரிமேடு கருவாயன்’** படத்தின்போது இராம.நாராயணன் அவர்களுடன் இணைந்தேன். அந்தப் படத்துக்குப் பின், இராம.நாராயணன் இயக்கிய படம் **‘மக்கள் ஆணையிட்டால்’**. அந்தப் படத்துக்கு தலைவர் கலைஞர் வசனம் எழுதினார். அப்போதுதான் முதன்முறையாக அவரை சந்தித்தேன்.

அதே காலகட்டத்தில்தான் **‘அறிவாலயம்’** திறப்புவிழா நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியை நான்தான் படப்பதிவு செய்தேன். அதையொட்டி, தளபதியின் சைக்கிள் பேரணி நடைபெற்றது. அதற்கு தனியாக தி.மு.கழகத் தொண்டர் அணியை வைத்து, படப்பதிவு செய்தோம். மக்கள் ஆணையிட்டால் திரைப்படத்தில் ஒரு பாடலை வைத்து, சைக்கிள் பேரணி போல ‘தீம் வீடியோ’ செய்தோம்.

### அரசியல் சூட்டிலும் ஷூட்டிங்

‘மக்கள் ஆணையிட்டால்’ படத்தின் எடிட்டிங் பணிகளுக்கு, கலைஞர் வருவார். அரசியல் களம் சூடாக இருந்த நேரம் அது. ஆனாலும், மிக இயல்பாக சினிமா பணிகளில் இருப்பார். எடிட்டிங் அறையில் இருக்கும் நேரத்தில் மிகச் சாதாரணமாக தனது நகைச்சுவைப் பேச்சால் மகிழ்விப்பார். அந்த நேரங்களில் வெள்ளரிக்காய் அவருக்குப் பிடித்தமாக இருக்கும்.

அந்தப் படத்தின்போது கலைஞர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். நான் வசன பேப்பர்களை எடுத்துக் கொண்டு, சிறைச்சாலையின் பார்வையாளர் நேரத்தில் கலைஞரிடம் படித்துக் காட்ட செல்வேன். அவற்றைப் படித்துக் காண்பித்துவிட்டு வருவேன். அப்போது அவித்த வேர்க்கடலைகள் வரும். எனக்கும் கொடுத்து ‘சாப்பிடுய்யா’ என்பார்.

### டைரக்டர் எங்கய்யா?

அதற்கு அடுத்ததாக ‘வீரன் வேலுத்தம்பி’ படத்திலும் கலைஞர் வசனத்தில் வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்தது. ரெசிடென்சி ஓட்டலில் ‘டிஸ்கசன்’ நடக்கும். சரியாக காலை ஒன்பது மணிக்கு கலைஞர் வந்துவிடுவார். மதியம் ஒரு மணி வரை இருப்பார். ஒரு நாள், இராம.நாராயணன் சாரும், நானும் வருவதற்குத் தாமதமானது. அதனால், கலைஞர் கோபப்படுவார் என இராம.நாராயணன் என்னை மட்டும் ஓட்டலுக்கு அனுப்பினார். எதிர்பார்த்தது போலவே, சண்முக நாதன் அண்ணன் ரிஷப்சனிலேயே எச்சரித்தார். அதுபோலவே அறைக் கதவைத் திறந்ததும், ‘எங்கய்யா டைரக்டர்?’ எனக் கோபப்பட்டு, ‘நான் கிளம்புகிறேன்யா’ என்று புறப்பட்டார்.

அமைதியாக இருந்த நான், அவர் கதவு வரை சென்றதும் ‘அய்யா’ என்றேன். ‘என்ன?’ என்றார். “அந்தப் படத்தில் வாகை சந்திரசேகர் பேச வேண்டிய வசனத்தை நீங்கள் டேப்பில் பதிவுசெய்து கொடுத்தால், அதை அப்படியே அவரைப் பேச வைத்து விடலாம்” என்றேன். ‘அப்படியா, சரி வா’ என அடுத்த நிமிடமே இயல்புக்கு வந்து வேலைகளில் ஆழ்ந்தார். உடன் அவரது குரலிலேயே ‘குடிசைதான் ஓர் புறத்தில்’ என்கிற அவரது நீண்ட கவிதையைப் பதிவு செய்து கொடுத்தார்.

நெருக்கடி, இறுக்கமான நிலை, கோபம் எனச் சூழல்கள் இருந்தாலும் அவரை இயல்பாக்குவது வேலை மட்டுமே, உழைப்பு மட்டுமே என உணர்ந்து கொண்டேன். அடுத்த நாள் இயக்குநருடன் வழக்கம்போல இயல்பான உரையாடல் நிகழ்ந்தது.

அதுபோல காட்சிகளை, அவர் விவரிக்கும்போது, மாற்று யோசனை கள் சொன்னால், ‘ஏன் அந்தக் காட்சிக்கு என்னய்யா’ என்பார் அல்லது ‘இதுகூட நல்லா இருக் குய்யா’ என எடுத்துக் கொள்வார். அந்த ஆண்டில் எனது திருமணம் நிச்சயமானது. கலைஞர் திருமணத் துக்கு வர வேண்டும் என விரும்பி, அவரிடம் கேட்டேன் ‘அழைப்பிதழ் கொடுத்தால் வருவேன்யா’ என்றார். சொன்னபடியே கலைஞர் வந்து வாழ்த்தியது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அதன் பின்னர் ‘மண்ணின் மைந்தன்’, ‘பாசக்கிளிகள்’ என அவருடன் தொடர்ச்சியாக நானும் வேலை செய்தேன். அப்போதெல்லாம் மிகப்பெரிய தலைவருடன் வேலை செய்கிறோம் என்கிற உணர்வுகளைக் கடந்து, அவர் எங்கள் தந்தை போன்ற உணர்வில் இருந்தோம்.

### தலைப்பில் பாதி...

எங்கள் தேனாண்டாள் பிலிம்ஸ் சார்பில், யூனிட்டுக்காக ஒரு படம் தயாரித்தனர். ‘தென்பாண்டி சீமையிலே’ என்கிற அந்தப் படத்தை நான் இயக்கினேன். படத்தின் பூஜை அன்று அவர் வந்து கலந்துகொள்ள வேண்டும் எனக் கேட்டதும் தேதி கொடுத்தார். ‘என் தலைப்பில பாதிய எடுத்துகிட்ட’ எனக் குறிப்பிட்டு என்னை வாழ்த்தினார்.

1989-ஆம் ஆண்டில் இராம.நாராயணன் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். ஒருநாள் சட்டமன்ற நிகழ்வின்போது ‘கோலப்பனை வந்து பார்க்கச் சொல்லவும்’ என இராம.நாராயணனுக்கு ஒரு துண்டு சீட்டில் எழுதி அனுப்பியுள்ளார். மறுநாள் சட்டமன்றத்தில் முதல்வரை சந்திக்கச் சென்றேன். உட்கார வைத்தவர், ‘உன் மேல ஊட்டியில ஒரு பிடிவாரண்ட் இருக்குய்யா, போய் என்னானு சரி பண்ணிட்டு வா’ என்றார்.

நான் அதற்கு முன், ஒரு படம் செய்ய முயன்று அது பாதியில் நின்றது. அந்தப் படத் தயாரிப்பாளரின் உறவினர் ஒருவர் நீதிபதியாக இருந்துள்ளார். அவர் மூலம் எனக்கு பிடிவாரண்ட் வந்த விஷயம், அப்போதுதான் தெரிந்தது. நான் அந்த விவகாரத்தைச் சரிசெய்துவிட்டு வந்து கலைஞரை சந்தித்தேன். அந்தச் சூழலில்தான் **‘புதிய பராசக்தி’** பட வாய்ப்பை எனக்கு அளித்தார்.

தெலுங்குப் படம் ஒன்றின் தழுவல் படம் அது. கோவை மாதம்பட்டியில் படப்பிடிப்புப் போய்க்கொண்டிருந்தது. இடையில், அவரை சந்திக்க முடியவில்லை. அவர் மதுரையில் இருந்து மாவட்டச் செயலாளர் மூலம் எனக்கு ஒரு கடிதம் கொடுத்துவிட்டார்.

“என்றைக்குச் சென்னைக்கு வந்து போகிறாய் எனத் தெரிவித்தால், நான் தயாராக இருக்க இயலும்” என அதில் குறிப்பிட்டிருந்தார். அந்த வார்த்தைகளைக் கண்டதும், தலைவரை மிகவும் வருத்தப்பட வைத்துவிட்டோமே எனக்குக் கஷ்டமாகிவிட்டது. உடன் வந்து பார்த்துவிட்டேன். ஆனாலும், அவர் தனது வருத்தத்தைக் காட்டிக்கொள்ளாமல் எப்போதும்போல என்மீது பாசம் காட்டினார். தொடர்ச்சியாக அவர் காட்டிய அன்புக்கு முன்னால், இந்த உலகத்தில் எதுவுமே எனக்கு ஈடாக இருக்கவில்லை.

**அவர் தனது வருத்தத்தைக் காட்டிக்கொள்ளாமல் எப்போதும்போல என்மீது பாசம் காட்டினார். தொடர்ச்சியாக அவர் காட்டிய அன்புக்கு முன்னால், இந்த உலகத்தில் எதுவுமே எனக்கு ஈடாக இருக்கவில்லை.**

எனது திருமணத்துக்கு வந்து வாழ்த்தியவர், எனது மகன், மகள் பிறந்தபோது அவர்தான் பெயர் சூட்டினார். எனது மகன் திருமணத்துக்கு அழைத்தபோது, இன்றைய முதலமைச்சரை அனுப்பி வாழ்த்தி நெகிழ வைத்தார்.

இப்படித் தொடர்ச்சியாக ஏதோ ஒரு வாஞ்சையுடன் என்னை வழிநடத்திக் கொண்டே இருக்கும் ஞானத் தந்தையாக கலைஞர் இருந்தார். அவர் கிளாப் அடித்துத் தொடங்கி வைத்த என் முதல் திரைப்படம்போல, என் வாழ்க்கையும் அவர் நினைவுகளால் நிறைந்திருக்கும்.!”

...பகிர்வார்கள்

## விருதுகளுக்குப் பெருமை!

பா.ஜ.க ஆதரவுக் குழுக்களால் பொய்ச் செய்திகள் திட்டமிட்டுப் பரப்பப்படுவதாக, அமெரிக்காவைச் சேர்ந்த ‘வாஷிங்டன் போஸ்ட்’ ஊடகம் சில மாதங்களுக்கு முன்பு அம்பலப் படுத்தியிருந்தது. சமீபத்தில், பொய்ச் செய்திகள் பரப்பப்படுவதில் இந்தியா உலகிலேயே நம்பர் 1 நாடாகத் திகழ்கிறது என்ற உண்மையும் வெளிவந்தது. இத்தகைய பொய்ச் செய்திகளை அம்பலப்படுத்தும் பணியில் ஈடுபட்டி ருக்கும் நிறுவனம் தான் ‘ALT நியூஸ்’.

அந்த நிறுவனத்தின் கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக் கோட்டையைச் சேர்ந்த முகமது ஜுபைருக்கு, குடியரசு தின விழாவில் ‘கோட்டை அமீர் மத நல்லிணக்க விருது’ வழங்கி கௌரவித்திருக்கிறது ’திராவிட மாடல்’ அரசு.

போலவே, பள்ளி கட்டுவதற்காக, பல கோடி ரூபாய் மதிப்பிலான தனது நிலத்தைத் தனது மகளின் நினைவாக அரசுக்கு இலவசமாக வழங்கிய ஆயி பூரணம் அம்மாள் அவர்களுக்கு ’முதலமைச்சர் சிறப்பு விருது’ எனும் விருதை முதல்முறை ‘யாக வழங்கிச் சிறப்பித்துள்ளது. சமூகம் சார்ந்து உழைப்பவர்களை என்றும் அரவணைக்கும் அரசு கழக அரசு என்பதற்கு இவையே சான்றுகள்.

## :ப்ளாஷ்பேக்



### வெற்றி மாநாட்டில் சால்வை!

1996-ஆம் ஆண்டு திருச்சியில் தி.மு.கழகத்தின் 8-வது மாநில மாநாடு ஜனவரி 26, 27, 28 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.



அம்பிகாபதி

அதைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றிபெற்று தமிழ்நாட்டில் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது. மாநாட்டு வெற்றியைக் கொண்டாடும் வகையில், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் அனைவருக்கும் சால்வை அணிவித்துப் பாராட்டினார். இந்தப் பாராட்டு, கழகப் பணியாற்ற மேலும் ஓர் உந்துதலாக அமைந்தது. அப்போது ஒன்றியச் செயலாளராக இருந்த நான், தலைவர் கலைஞரிடம் வாழ்த்து பெற்றபோது எடுத்த படம் இது..

**-எஸ்.ஏ.அம்பிகாபதி, அவைத்தலைவர், திருச்சி வடக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### இந்தி எதிர்ப்பு வாகனங்கள்!

**1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம், ஐம்பது நாட்களுக்கு மேல் நடைபெற்றது. தமிழ்நாட்டில் அனைத்து பள்ளிக் கல்லூரிகளிலும் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம், துண்டு பிரசுரங்கள் சென்று சேர்ந்தன. பேருந்துகள், சரக்கு வாகனங்கள் என அனைத்து வாகனங்களிலும் இந்தி எதிர்ப்பு முழக்கங்கள் எழுதப்பட்டன. ‘உடல் மண்ணுக்கு, உயிர், தமிழுக்கு’ போன்ற வாசகங்கள் எழுதாத இடங்களே இல்லை என்கிற அளவு, இந்தி எதிர்ப்பு தீவிர மடைந்திருந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 371




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131